பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

# உதயன்

விலை ரூ 2/-

When, only The best is Good Enough



By Solide Pumps

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு ஐப்பசி மீ 08 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 12 ( 24 - 10 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 217

### தமிழ் ஈழம் மக்கள் மன்ற தலைவரின் மறைவினால்

## வடமராட்சி பகுதி எங்கும் சோகத்தில் ஆழ்ந்தது

வடமராட்சி, அக். 24

தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் திரு. க. சிவானந்தசுந்தரம் படுகொலை செய்யப்பட்டதையடுத்து வடமராட்சி எங்கும் நேற்று சோகமயமாகக் காட்சியளித்தது.

இறந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வடமராட்சியின் சகல பகுதிகளிலும் கறுப்புக் கொடிகள், தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

துக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் ஆங்காங்கே சோக கீதங்கள் ஒலித்துக்கொண்டிருந்தன.

கடைகள், வர்த்தக ஸ்தாபனங்கள் முற்றாக மூடப்பட்டிருந்தன வீதி மறிப்புப் போரினாலும் ஹர்த்தாலினாலும் போக்குவரத்துக்கள் எதுவும் வடமராட்சி வீதிகளில் இடம்பெறவில்லை.

அதேவேளை கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், பளை போன்ற பகுதிகளிலும் கடைகள் மூடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

இறந்த தலைவரின் இறுதி ஊர்வலம் நடைபெறும் இன்றைய தினமும் குடாநாடு எங்கும் பூரண துக்கம், ஹர்த்தால் ஆகியவை அனுஷ்டிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது (உ-160)



## இறுதிக் கிரியைகள் இன்று

வல்வெட்டித்துறை, அக். 24

கடந்த வெள்ளிக்கிழமை படுகொலை செய்யப்பட்ட தமிழ்ஈழ மக்கள் மன்றத் தலைவர் திரு. க. சிவானந்தசுந்தரத்தின்பூதவுடல் இன்று வடமராட்சியின் பிரதான வீதிகளில் எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்.

மக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும் இடங்களாவன:-

இன்றுகாலை 8மணிக்கு பருத்தித்துறையில் அன்னாரின் இல்லத்திலிருந்து இறுதிஊர்வலம் ஆரம்பமாகும்.

புலோலி, மாலிசந்தி, நெல்லியடி, மூத்தவிநாயகர் கோயிலடி, குஞ்சர்கடை, நவிண்டில், உடுப்பிட்டி ஊடாக எடுத்துச் செல்லப்படும்.

பூதவுடல் காலை 9 மணிக்கு வல்வெட்டித்துறைச் சந்தியில் உள்ள அலங்கார மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பின் மீண்டும் 10-30 மணியளவில் கடற்கரை வீதி, பொலிகண்டி, திக்கம், இன்பருட்டி, சுப்பர்மடம் வழியாக திக்கமுனை பருத்தித்துறை மயானத்திற்கு இறுதி ஊர்வலம் செல்லும்

அங்கு பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளின் இரங்கலுரையின் பின் இறுதிக் கிரியைகள் நண்பகல் அளவில் நடைபெறும்.

(உ-160)

## பரவலாக வீதிமறிப்புப்போர்

வடமராட்சி, அக் 24

தமிழ் ஈழம் மக்கள் மன்றத்தின் தலைவர் திரு. க. சிவானந்தசுந்தரம் படுகொலை செய்யப்பட்டதை ஆட்சேபித்தும், கண்டித்தும் நேற்று வடமராட்சியின் பல பகுதிகளிலும் வீதி மறிப்புப் போராட்டம் இடம்பெற்றது.

வீதிமறிப்புப் போரினால் வடமராட்சியில் அனேகமாக பல இடங்களிலும் போக்குவரத்துக்கள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன.

பருத்தித்துறை, நெல்லியடி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, திக்கம், இன்பருட்டி, வியாபாரிமூலை, சுப்பர்மடம் உட்பட பல இடங்களிலும் வீதிமறிப்புப் போரில் மக்கள் பெருமளவில் பங்குபற்றினர்.

நேற்றுக் காலை 10 30 மணியளவில் பொலிகண்டி அமைதிப்படை முகாமில் இருந்து கால்நடையாக வந்த நூற்றுக் கணக்கான இந்திய அமைதிப்படையினரை வல்வெட்டித்துறை பிரதான வீதியில் சுங்க இலாகச் சந்திக்கு அருகில் வீதிமறிப்பில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் மறித்தனர்.

வழிமறிப்புப் போர் தொடர்ந்ததையடுத்து அமைதிப்படையினர் வல்வை கடற்கரையோரமாகச் சென்று வீதி மறிப்புப் போர் இடம்பெறாத சிறு ஒழுங்கை ஒன்றின் வழியாக உடுப்பிட்டி அமைதிப்படை முகாமைச் சென்றடைந்தனர்.

இதனிடையில் வீதிமறிப்புப் போரில் கலந்து கொண்டு ஒத்துழைத்த அனைவருக்கும் வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழுவினர் நன்றி தெரிவித்துள்ளனர் (உ-160)

## அரியாலை பிரசைகள் குழு கண்டனம்

யாழ்ப்பாணம் அக் 24

தமிழ் ஈழம் மக்கள் மன்றத்தலைவர் திரு க. சிவானந்தசுந்தரம் படுகொலை செய்யப்பட்டதை அரியாலை பிரசைகள் குழு வன்மையாகக் கண்டித்துள்ளது.

பிரஸ்தாப குழு வெளியிட்டுள்ள அறிக்கையில்—

கடந்த 21 ஆம் திகதி எம்மால் ஏற்பாடு செய்யப்பட்ட அஞ்சலிக்கூட்டத்தில் கலந்துகொண்டு விட்டு, வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் திட்டமிட்டரீதியில் இனந்தெரியாத துப்பாக்கிநபர்களால் திரு.சிவானந்தசுந்தரம் படுகொலைசெய்யப்பட்ட செய்திகேட்டு நாம்வேதனையும், அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் கொண்டுள்ளோம்.

24 ஆம் திகதி (இன்று) நடைபெறும் அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ளுமாறு அரியாலை வாழ் மக்களைக் கேட்டுக் கொள்வதுடன், அன்றைய தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு கோருகின்றோம் இவ்வாறு அவ்வறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ-9)

## சு.கவுக்கு மிரட்டல் ஐ.தே.கவிடமிருந்தாம்

### சிறிமா அம்மையார் கூறுகிறார்

கொழும்பு, அக் 24

சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களை ஐக்கிய தேசியக் கட்சியினர் மிரட்டி வருவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது.

கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இக்குற்றச் சாட்டைச் சுமத்தினார்.

ஊவா மாகாணத்தில் உள்ள கட்சி அமைப்பாளர்களுக்கு, இம் மிரட்டல் கடிதங்கள் கிடைத்துள்ளன இதனால் ஊவா மாகாணத்தில் இரண்டு கூட்டங்கள் கடைசி நிமிடத்தில் ரத்துச் செய்யப்பட்டன என்று திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

இம் மிரட்டல் கடிதங்கள் சுதந்திரக் கட்சிக்கு எதிர்ப்பான அமைப்பு ஒன்றின் பெயரில் அனுப்பப்படுவதாகவும் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார். (உ-எ)

### மாகாணசபை

## தேர்தலை ஒத்திவைக்குமாறு கிழக்கு எம். பிக்கள் கோரிக்கை

கொழும்பு, அக் 24

வடக்கு - கிழக்கு மாகாண சபை தேர்தலை ஒத்திவைக்கும்படி கிழக்கு இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியிருக்கின்றனர்

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கே சி பந்துக்கு அனுப்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படும் மஜர் ஒன்றில் அவர்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இந்த மகஜர் உயர் மட்டத்தில் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தல் திட்டமிட்டபடி நடக்குமா? என்று கொழும்புச் செய்தியாளர் ஒருவர் தேர்தல் ஆணையாளரைக் கேட்டார்

''அது குறித்து எதுவும் என்னால் தற்போது விவரிக்க முடியாது-'' என்று ஆணையாளர் தெரிவித்தார். (ஒ எ)

### முச்சந்தி மூளி



அப்படிரவல் ஏஜண்ட்மாருக்கு நல்ல உழைப்புத்தான்போலை......!

## ஓமந்தையில் கண்ணிவெடி! ஏழு ஜவான்கள் உயிரிழப்பு!!

கொழும்பு, அக் 24

வவுனியா மாவட்டத்தில் ஓமந்தைக்கு அருகே நேற்றுக் காலை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் நடத்திய தாக்குதலில் இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த ஏழு ஜவான்கள் உயிரிழந்தனர் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் 11 ஜவான்கள் உயிரிழந்தனர் என்று வவுனியாவில் உள்ள பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது

ஏராளமான இந்திய வீரர்கள் காயமடைந்தனர் என்று இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இதனிடையில் மட்டக்களப்பில் செளுவாமடு என்னும் இடத்தில் கடந்த சனியன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் அமைதிப்படைக்கும் ஏற்பட்ட [illegible] துப்பாக்கிச் சண்டையில் இரண்டு ஜவான்கள் கொல்லப்பட்டனர். [illegible] விடுதலைப் புலிகளுக்கு எதிரான தீவிரவாத அமைப்பு ஒன்றைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டார் இப்படி வெரித்தாஸ் வானொலி மேலும் தெரிவித்தது. (உ-எ)

### தலைமன்னாரில் எய்ட்ஸ் பரிசோதனை

கொழும்பு அக் 24

தலைமன்னார் இறங்குதுறையில் வைத்து எய்ட்ஸ் பரிசோதனை நடத்தும் திட்டத்தை எதிர்ப்பின் மத்தியிலும் அமுல் நடத்துவது என்று சுகாதார அமைச்சு முடிவு செய்திருக்கிறது.

தலைமன்னாரில் வைத்து எய்ட்ஸ் பரிசோதனை நடத்துவது பாரபட்சமான நடவடிக்கையாகும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் எதிர்ப்புத் தெரிவித்தது.

நாட்டின் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து உலகசுகாதாரஸ்தாபனம் சுகாதார அமைச்சுக்கு உத்தரவுகள் பிறப்பிக்க முடியாது என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-எ)

### சுபநேரம்

24- 10 - 1988
ஐப்பசி - 08
திங்கட்கிழமை
சுபநேரம்:-
12 02முதல் 1-32 வரை
ராகுகாலம்:-
7-32 முதல் 9-02வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### தெற்கில் இருந்தும்

# புகலிடம் தேடி வெளிநாட்டுக்கு படையெடுப்பு!

### விமான சேவையிலும் நெருக்கடி

கொழும்பு, அக்டோபர் 24

இலங்கையின் வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாது தெற்கிலும் அமைதி நிலை பாதிக்கப்பட்டிருப்பதை அடுதது இங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு புகலிடம் தேடிச் செல்வோர் எண்ணிக்கை திடீரென அதிகரித்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

1981, 82, 83ஆம் ஆண்டுகளில் தமிழ் இளைஞர்கள் புகலிடம் தேடி படையெடுதத நாடுகளுக்கே தற்போது சிங்கள இளைஞர்களும் படையெடுக்கத் தொடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு ஜேர்மன், பிரான்ஸ், டென்மார்க், சுவிட்சர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் மற்றும் கடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குமே அதிகமானோர் புகலிடம் தேடிச் செல்வதாக வெளிநாட்டுப் பிரயாண முகவர் நிலையங்களில் இருந்து தெரிய வருகிறது.

இதனால் இலங்கைக்கான வெளிநாட்டு விமான சேவையிலும் நெருக்கடி நிலை ஏற்பட்டிருப்பதாக அம்முகவர் நிலயங்கள் மேலும் தெரிவித்தன.

தமிழ்ப்பகுதி இளைஞர்கள் இந்நாடுகளுக்குப் புகலிடம் தேடிச் சென்ற வேளைகளில், தென்பகுதியில் அமைதி நிலவுவதைக் காரணம் காட்டி இந்நாடுகளில புகலிடம் வழங்கும் விடயத்தில் பெரும் கெடுபிடி காட்டப்பட்டது.

ஆனால் தற்போது வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாது தெற்கிலும் நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழிற்சாலைகள் போன்றவை காலவரையறையின்றி மூடப்பட்டிருக்கின்றன.

இதனால் இளைஞர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### அனாதரவான நிலையில் ஆண்குழந்தை

யாழ்ப்பாணம் அக 24

மானிப்பாய் அந்தோனியார் கோயிலில் பச்சிளம் குழந்தை ஒன்று கைவிடப்பட்ட நிலையில் நேற்றுமாலை காணப்பட்டது.

அழகான இந்த ஆண் குழந்தையை அந்தோனியார் ஆலயபங்குத்தந்தை மானிப்பாய் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்ததாக அறியவருகிறது (ஒ)

## பூஸா கைதிகளை விடுவிக்காவிடின் தாக்கம் வெளியிலும் பலமாக இருக்கும்

### ரேலோ செயலதிபர் கடிதம்

யாழ்ப்பாணம் அக் 24

பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தண்டிக்கப்பட்ட அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் இலங்கை- இந்திய அரசுகள் உடனடி நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். இல்லையேல் இதன் தாக்கம் சிறையில் மாத்திரமல்ல வெளியிலும் பலமாக எதிரொலிக்கும்.

இவ்வாறு ரெலோ செயலதிபர் திரு. அ. செல்வம் இந்தியத் தூதுவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அக்கடித விபரம் வருமாறு:-

இலங்கை- இந்திய ஒப்பந்தத்திலுள்ள யாவும் நிறைவேற்றப்படுகின்றனவா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

ஒப்பந்தத்திலுள்ள முதலாவது தீர்வான அரசியல் கைதிகள் விடுதலை 14 மாதங்களாகியும் நிறைவு பெறவில்லை. இது வேதனைக்குரியது மட்டுமல்ல. ஒப்பந்தம் மீது சந்தேகத்தை எமக்கும் மக்களுக்கும் ஏற்படவாய்ப்பளிக்கிறது.

மக்களுக்காகப் போராட புறப்பட்ட நாம் ஒப்பந்தம் கைச்சாத்தாகியதும் சகல அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவார்கள் என மக்களுக்கு வாக்குறுதியளித்தோம். ஆனால் அது முழுமையாக நடைபெறுதமை

(8 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Brother தையல் மெஷின், சாப்பாட்டு மேசை, Hall set மேசை, Show case Typewriter சண்ணுடி மேசை Black & Decker Drill Pram Stainless Steel Zink கட்டில், மெத்தைகள் Pressure Cooker மற்றும் பொருட்களும் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 122, சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு. (7417)

கேரதீவு - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள குழாய்க் கிணறு, மின்சார வசதியுடனான வீட்டுடன் 2½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. விலாசம் K. அரியராசா நாவற்குழி கிழக்கு (மகாவித்தியாலத்திற்கு அண்மையில்) தச்சன் தோப்பு, தொடர்பு K. அரியராசா, 302, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (7361)

ரியூட்டரிக்கும் மற்றும் பாவனைக்கும் உரிய வாங்கு மேசைகள் விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு A. கனகசிங்கம் 210 பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (C/655)

### வீடியோ, கமெராக்கள் டெக்குகள் விற்பனை

J.V.C (GXN 70 E) Sony National GI, வீடியோ, கமெராக்கள், National NV 100, Orion [Portable] வீடியோ டெக்குகள், Yachica FX 7 கமெரா, உடன் விற்பனைக்குண்டு. Hero Recording Bar, Nelliady. (7234]

### தீபாவளி பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். (C 357)

## தேவை

கொம்போஷிங் செய்யக்கூடியவர்கள் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். தரன் ஸ்ரூடியோ, 9, 8 நவீன சந்தை, யாழ்ப்பாணம். போன் 23858 (7236)

### வீடியோ படப்பிடிப்பு

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள, அமங்கல நிகழ்ச்சிகளை 3 கமெராக்கள் பொருத்தி புதுமையான முறையில் வீடியோ படப்பிடிப்புச் செய்திட "பிரதீப் மூவிஸ்", புது வீதி, கொய்யாத்தோட்டம், (கிளைகள் இல்லை) தொடர்புகட்கு:- 'துஸ்' கணில்) (6980)

### மாறிவிட்டது

யாழ்ப்பாணம் ஐங்கரன் ஸ்ரோரில் வேறு சைக்கிள்களோடு வைத்துப் பூட்டிய எனது Flying Pigeon சைக்கிளை தவறுதலாக மாறி எடுத்துச் சென்றுள்ளார்கள். அதை தயவு செய்து திருப்பி என்னிப் படைத்து தனது சைக்கிளை என்னிடம் பெற்றுக்கொள்ளவும். (7416)

## விற்பனைக்கு

யாழ்- மாநகர எல்லைக்குள் 3 2/3 பரப்பில் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 387, C/o உதயன் காரியாலயம். (7247)

## வகுப்புகள்

G. S. Q (Bio and Maths 1990) Stenography and Home Science (Diploma) வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. 15-11 88 முன் விண்ணப்பிக்கவும். Course in Pharmacy (I year) நடைபெறுகின்றது. விபரங்களுக்கு: அதிபர், உயர்கலைக்கல்லூரி (The College of Studies 73, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (7425)

### A/L இரசாயனம்

108 Brown Road A/L 90 பொது இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் (24 10-88) திங்கள் 6. 30 am (திங்கள், புதன்' வெள்ளி 6 30 am) (7238

### வினு விடை வகுப்பு

A/L 89 கலை, வர்த்தக மாணவர்களுக்கான வினு விடை வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. கிளைகள்:- பருத்தித்துறை, வவுனியா. (7220)

### பொதுஅறிவுப்போட்டி

புதுவை தமிழ் சங்கத்தினுல் நடததப்படும் பொது அறிவுப்போட்டி 5-11-88 வரை மாணவரின் வேண்டுகோளுக்கு இணங்க பிற்போடப்பட்டுள்ளது. மேலதிக தொடர்பு: குகன் கல்வி நிலையம், அச்சுவேலி. (7248)

### பவர், ஸ்பிறேயர் விற்பனைக்குண்டு

நன்முக வேலை செய்யக்கூடிய நிலையில ஏயன்ற் பவர்ஸ் பிறேயர் (Urgent Power Sprayer) ஒன்று விற்பனைக்குண்டு தொடர்பு: ச. பொன்னம்பலம் (ஓய்வு பெற்ற ப. நோ. கூ. சங்க காசாளர்) கைதடி வடக்கு, கைதடி, அல்லது பொ. சண்முகலிங்கம். எக்சவுட்டிங் சிஸ்ரம் சேர்விஸ் லிமிற்றட் 145, மெயின் வீதி, யாழ்ப்பாணம் (7244)

### ஜோதிடம்

05-11-88 சனி மாற்றம் தமிழர்களின் மேட ராசிக்கு மறுமலர்ச்சியையும் தென்னிலங்கை கும்பர சிக்குவன்முறைகளையும் ஏற்படுத்தும் எல்லா இராசிகளின் பலன்கள் ரூ 3/50 எங்கும் கிடைக்கும் நூலாசிரியர் ஆத்மஜோதி சத்தியதாஸன், காங்கேசன்துறை. (7245)

### சைக்கிள் காணவில்லை

கடந்த 13 ஆம் திகதி நெல்லியடி இன்டஸ்ரியலுக்கு அண்மையில் கோவிற்கடவையில் வசிக்கும் ஒருவர் சென்று கொண்டிருந்த பொழுது படையினரால் விசாரணைக்கென தடுக்கப்பட்ட சமயம் அவருடன் கூடவந்தவர் சைக்கிளை எடுத்துச்சென்றுவிட்டார். சைக்கிளை கரவை இளைஞர் ஒன்றியசனசமூக நிலையத்தில் ஒப்படைக்குமாறு அந்த நபர் வேண்டப்படுகிறார் கரவை இளைஞர் ஒன்றியம். (7406)

### கோழிக்குஞ்சு விற்பனை

Hisex Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் Hyline வெள்ளை கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் கறுப்பு சேவற்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் 28-10-88 வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில் 7250)

சிலோன் கிறவுண் எலிவேற்றர் லிமிடெட் [பிறிமா] உத்தரவாதப் உள்ள லேமன் ஒருநாள் புறொயிலர் குஞ்சுகள் வெள்ளை பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சனிக்கிழமைகளிலும் வழங்கப்படும். 7 நாட்கள் உத்தரவாதம் அளிக்கப்படும். முன்கூட்டி பதிவு செய்யும் இடங்கள், S. M. ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் 11/6, ஸ்ரான்லி வீதி, திருமகள் ஸ்ரோர்ஸ், சிவலிங்கப் புளியடி, சாயி மெடிக்கல்ஸ் திருநெல்வேலிச் சந்தி. [7602]

Hisex Golden Comet பிறவுண் சேவற்குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் Hyline வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள், ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும் முன் கூட்டிப் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம் சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில. (7249)

### தவறிவிட்டது

அடையாள அட்டை இல. 552752120 V லைசென்ஸ் இல 016372 இலக்கமுடைய சாரதி லைசென்ஸ் யாழ். பஸ் நிலையத்திலிருந்து அல்லைப்பிட்டிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற போது தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7404)

யாழ்ப்பாணத்தில் பரவும்

# மஞ்சள் காமாலையைத் தடுக்க உடன் நடவடிக்கை தேவை

## அமைச்சு அதிகாரிகளிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 24

'ஹெப்பரைட்டிஸ் பி' என்னும் நோய்க் கிருமியினால் உருவாகும் மஞ்சள் காமாலைநோய் பரவி வருவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனைத் தடுபதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவும்'

இவ்வாறு யாழ். போதனு வைத்தியசாலை வட்டாரங்கள் சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளைக் கோரியுள்ளது.

யாழ். போதனு வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்ததானம் செய்தவர்களின் இரத்தத்தைப் பரிசோதித்ததில் சுமார் 10 பேர் மஞ்சள் காமாலை நோய் உடையவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

இதுவரை காலமும் யாழ். போதனுவைத்தியசாலை இரத்தவங்கி பிரிவில் இரத்ததானம் செய்பவர்களின் இரத்தத்தில் மலேரியா, மேக நோய் போன்ற நோய்களை உருவாக்கும் கிருமிகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டு பிடிப்பதற்கான கருவிகளே இருந்தன. தற்பொழுது இவற்றுடன் மஞ்சள் காமாலை நோயை உருவாக்கும் 'ஹெப்பரைட்டிஸ் பி' என்ற நோய்க் கிருமியைக் கண்டு பிடிப்பதற்கான கருவிகளும் கிடைத்துள்ளன.

இவற்றைக் கொண்டு பரிசோதித்ததிலேயே மஞ்சள் காமாலை நோயின் தாக்கம் தெரிய வந்துள்ளது.

மஞ்சள் காமாலை நோயின் பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவும்படி சுகாதார அமைச்சின் அதிகாரி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் யாழ். தொற்றுநோய்த் தடுப்பதிகாரி தேசிய குருதிப்பரிமாற்ற சேவை என்பவற்றை யாழ். போதனு வைத்தியசாலை வட்டாரங்கள் கேட்டுள்ளன. (இ-5)

## தடுத்துவைப்பு

மட்டக்களப்பு அக். 24

மட்டக்களப்பு சர்வோதய இணைப்பாளர் திரு. ஏ. மகேந்திரன் இந்தியப் படைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இரு வாரங்களுக்கு முன்பு விடுதலையான இவர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கைது செய்யப்பட்டுள்ளதால் மாவட்டத்தில் சர்வோதய நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-21)

# வவுனியாவில் அகதிகளுக்கு 2500 வீடுகள்

வவுனியா அக் 24

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயத்தின் நிதி உதவியுடன் 2500 வீடுகள் வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார [illegible]யின் வவுனியா மு[illegible]மையாளர் திரு. எஸ். [illegible]ந்தலிங்கம் உதயனுக்கு[illegible] தெரிவித்தார்.

இந்தி[illegible]விலிருந்து [illegible]ந்[illegible]புள்ள 1500 அகதிக் குடும்பங்களுக்கும்; உள்ளூரிலேயே பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த 1000 குடும்பங்களுக்குமே இந்தவீடுகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தைத் தொடங்கிவைக்கும் முகமாக நொச்சிமோட்டையில் வீடு ஒன்றிற்கான அடிக்கல்லை வைபவரீதியாக வவுனியா அரசாங்க அதிபர் ரீ. லங்காநேசன் நட்டு வைத்தார்.

இராணு[illegible] நடவடிக்கைகளின்போது

# 83, 84 ஆம் ஆண்டுகளில் மரணமானேரின் குடும்பங்களுக்கும் செஞ்சிலுவைச் சங்கம் உதவும்

யாழ்ப்பாணம், அக் 24

83 ஆம் 84 ஆம் ஆண்டுகளில் இராணுவ நடவடிக்கைகளின போது மரணமானவர்களின் குடும்பங்களுக்குத் நிவாரணம் வழங்க யாழ் செஞ்சிலுவைச் சங்கம் முனைவந்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

இதுவரை காலமும் 1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இராணுவ நடவடிக்கைகளின் போது மரணமானவர்களின் குடும்பங்களுக்கே நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன.

எனினும் 83 ஆம் ஆண்டுகுப் பின்னர் இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதைத் தொடர்ந்தே இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

83 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இராணுவ நடவடிக்கைகளினுல் தமது உறவினர்களை இழந்தவர்கள் தங்கள் அரசாங்க அதிபர் பிரிவுக்குப் பொறுப்பான செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளைத் தொடர்பு கொள்வதன் மூலம் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஏற்கனவே செஞ்சிலுவைச் சங்க நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொண்டவர்கள் தற்பொழுது வழங்கப்படவிருக்கும் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாது என்றும் [illegible]ள்ளது. (ஓ-5)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திரு த. சின்னத்தம்பி
(இளைப்பாறிய ஆசிரியர் கொக்குவில், இந்துக் கல்லூரி)

தோற்றம்: 23. 06. 1901 — மறைவு: 05- 11. 1987

திதி: 24. 10 1988

பாசமிக்க அன்புத் தந்தையே அப்புச்சி! எங்கள் குடும்பத்தலைவனுய் ஒளி விளக்காய் இருந்து பாசமும் பரிவும் காட்டி எமை வளர்த்து கல்வியூட்டி எமக்கெல்லாம் வழி காட்டி வாழவைத்த அன்புத்தெய்வமே அப்புச்சி! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றுலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களை விட்டு என்றும் அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தலையாழி,
வண்ணார்பண்ணை கிழக்கு. (7543)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



டானியல் சின்னப்பு குலசிங்கம்
(பொறியியலாளர்)
பொறியியல் ஆலோசகர் நைஜீரியா

மண்ணில்: 14 - 04 - 1925 — விண்ணில்: 24 - 10 - 1987

அன்பின் திருவுருவே
அறிவின் ஒளிவிளக்கே!
என்றும் எமக்காக
இதயத்தைத் தந்தவனே
சந்தனமாய்த் தேய்ந்து
சகோதரர்க்காய் வாழ்ந்து
தீயவரால் விண்ணைத்
திடீரென்றடைந்தவனே.

பரமபிதா பாதம் பற்றிப் பிடித்ததனுல் அருமைச் சகோதரரை ஐயா மறந்தாயோ அருமைச் சகோதரரை ஐயா மறந்தாலும் உரிமைச் சகோதரர்கள் உன்னை மறவாரே. பெருமைக் குரியவனே பேசரிய யேசுபதம் பெற்றே நற்சாந்தி பெறுக என வேண்டுகின்றோம்.

அன்புடன்
சின்னப்பு குடும்பத்தினர்
374, பருத்தித்துறை வீதி,
[illegible]

ஆஸ்பத்திரி கிளீனர்ஸ்
சவூதிஅரேபியாவில் உடனடியாக வேலைவாய்ப்பு
200 பேர் ஆஸ்பத்திரி கிளீனர்ஸ்
சம்பளம் 400 SR (ஆண்கள்)
வயது 21 — 48 வரை
ஒரு வாரத்தில் பயணம் செய்யலாம். கடவுச் சீட்டும் கடவுச் சீட்டையுடையதான மூன்று படங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.
KUWAIT
30 பேர் சம்பளம் 35 K.D.
உடன் தேவை
இரண்டு மாதத்தினுள் பிரயாணம் செய்யலாம்
Please Contact:
T. V. TRAVELS & TOURIST
BROWN ROAD,
Railway Station (front)
(C662) KOKUVIL.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
இராஜரெட்ணம் லக்ஸ்மணன்
(மோகன்)
(யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன்)

ஆண்டவன் படைப்பு: 17 - 09 - 1971 — அழிப்பு: 24 - 10 - 1987

திதி: 11 - 11 - 1988

அன்புருவே! அகல் விளக்கே!
அகலாத பேருநவே
புன்சிரிப்பே புகழ் மோகனே
புது நட்சத்திரமே
கண்மணியே! கல்வியங்காடு உதிர்ந்த
கட்டிளங்காளையே லக்ஸ்மணு
அன்னை மனம் அங்கலாய்க்க
அன்புத் தந்தை நோக
முன்னைப் பிறந்த சகோதரர்கள்
முழு நினைவின்றிப் பரிதவிக்க - நீ
பிரிந்தாயே

நல்லூர் முருகனிடம் அகதியாய் இருந்தால் அடைக்கலம் தருவான் என்று எண்ணிச் சென்றுய். ஆனல் முருகனே ஷெல் என்னும் வடிவில் காலனை ஏவி விட்டு மின்னுளியாய் எங்களிடம் இருந்து உன்னை மறைத்து விட்டானே! தாளாத துயரில் ஆழ்த்தி விட்டு தவிக்க விட்டதேன் லக்ஸ்மணு!

உன்னையிழந்து ஒரு வருடமாகியும் எங்கள் கண்ணெதிரில் நீ இருந்து பேசிச் சிரிக்கின்றுய்! இன்னும் எத்தனை வருடங்கள் ஆனுலும் உன்னைக் கண்டிட எங்கள் மனம் துடிக்குதே மோகன், கண்ணீர் பெருகவே. உன் ஆத்மா சாந்தியடைய இந்நாளில் நல்லூர் முருகனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்

அப்பா, அம்மா, அத்தான், அக்காமார், அண்ணுமார், அம்மம்மா, மருமக்கள், மற்றும் நண்பர்களும்.

முருகன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி. (7481)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உண்ணா விரதத்துக்கு ஆதரவு கோரி அறிக்கை

யாழ்ப்பாணம் அக் 24

விடுதலை பெற்றுவந்த அன்பான தோழர்களே பூஸாவில் சிறை அனுபவம் எப்படியான தென்பது நேற்றைய கைதிகளான எமக்கு புரியாததல்ல. எமது சகதோழர்கள் சாவின் விளிம்புக்கே தள்ளப்பட்டிருக்கும் இவ்வேளையில் அவர்களின் துயர்துடைத்து விடுதலைக்கு வழிவகுக்க நம் ஒவ்வொருவரின் பங்களிப்பையும் வழங்க இந்த உண்ணாவிரதத்தில் பங்கு கொள்வோம்.

பூஸாவில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலில் வெள்ளிக்கிழமை முதல் மேற்கொள்ளப்பட்டு வரும் சுழற்சிமுறை உண்ணாவிரதப் போராட்டத்துக்கு அழைப்புவிடுத்து வெளியிடப்பட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை முன்னர் பூஸா கைதியும் கடந்த ஆகஸ்ட்டில் பூஸா கைதிகள் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டவரும் முன்னாள் பூஸா அரசியல் கைதிகள் போராட்டக்குழுத் தலைவரும், தற்போதைய விடுவிக்கப்பட்ட கைதிகளின் புனர்வாழ்வுக் கழகச் உபதலைவருமான யோசட் ஞானப்பிரகாசத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த உண்ணாவிரதத்தில் மனித நேய அடிப்படையில் சகலரையும் கலந்து கொள்ளுபடி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-9)

# மூடப்பட்ட நிதி நிறுவனங்களின் வைப்பாளருக்கு பணம் மீளளிப்பு

## மத்திய வங்கி நடவடிக்கை

கொழும்பு, அக் 24

மூடப்பட்ட நிதி நிறுவனங்கள் சிலவற்றை மத்தியவங்கி அண்மையில் பொறுப்பு ஏற்றது அல்லவா! அப்படி பொறுப்பு ஏற்கப்பட்ட நிதி நிறுவனங்களில் வைப்புச் செய்தவர்களின் பணத்தில் ஒரு பகுதியை, வைப்புச் செய்தவர்களுக்கு விரைவில் மத்தியவங்கிவழங்க உள்ளது.

ஆனால் ஒரு நிபந்தனையுடனேயே இந்த பணத்தை அவர்களுக்கு மத்திய வங்கி வழங்கும் என்று மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திருப்பிக் கொடுக்கும் வைப்புப் பணத்தை மத்திய வங்கியினால் புத்துயிர் கொடுக்கப்படும் அந்த நிறுவனத்தில் 2 அல்லது 3 ஆண்டுகளுக்கு வைப்பாளர் முழுமையாக வைப்பில் இட வேண்டும் என்பதே அந்த நிபந்தனை.

மத்திய வங்கியின் அந்த சிரேஷ்ட அதிகாரி மேலும் சொன்னதாவது;

ஒரு வைப்பாளருக்கு அவர் வைப்புச் செய்த தொகையை பொறுத்து 25 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை வழங்குவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை மத்திய வங்கி ஏற்கனவே செய்து விட்டது.

இந்த அறிவிப்பைக் கண்டதும் வைப்பாளர்கள் மத்திய வங்கியை முற்றுகையிடுவதால் ஒரு பலனும் ஏற்படாது.

நிதி நிறுவனங்கள் சில மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு வைப்பாளருக்கும் மத்திய வங்கி கடிதம் அனுப்பும்.

அக்கடிதத்தில் மத்திய வங்கிக்கு வந்து பணத்தைப் பெறும் திகதி குறிப்பிடப்பட்டிருக்கும்.

இப்படி அந்த அதிகாரி தெரிவித்தார்.

மத்திய வங்கி இப்படி உதவப்போகும் வைப்பாளர்கள் வைப்புச் செய்த நிதி நிறுவனங்களின் பெயர்களை வெளியிட அந்த அதிகாரி மறுத்துவிட்டார்

வைப்பாளர்களுக்கு உதவுவதற்காக மூடப்பட்டுள்ள நிதி நிறுவனங்களின் நிர்வாகத்தை மத்தியவங்கி ஏற்றிருப்பது தெரிந்ததே (உ-எ)

அதிபர்களுக்கான

# வினைத்திறன் காண்தடைப் பரீட்சை டிச.28 இல்

யாழ்ப்பாணம், அக். 24

இலங்கை அதிபர் சேவை 1,2 3 தரத்தில் உள்ளவர்களுக்கான வினைத்திறன் காண்தடைப்பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி நடைபெறும் என அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப்பரீட்சைக்கான பாடவிதானங்கள் தாபனக் கோவையின் ஏற்பாடுகள் பாடசாலை நிதி முகாமைத்துவம். கல்வி நிர்வாகமும் மேற்பார்வையும் என்பனவாகும். இந்தப் பரீட்சையில் சித்தி அடைய பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பாடத்துக்கும் பிரித்தொதுக்கப்பட்ட மொத்தப் புள்ளியில் குறைந்தது 40சதவீதம் பெற வேண்டும்.

பரீட்சையில் பங்குபற்ற விரும்பும் ஒருவர் முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றினால் கட்டணம் எதுவும் இல்லை என்றும் அடுத்த அமர்வுகளின் முழுப் பரீட்சையாயின் முப்பது ரூபாவும் ஒரு பாடமாயின் பத்து ரூபாவும் கட்டணமாகச் செலுத்த வேண்டுமெனவும் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(இ-ஐ-9)

அண்மையில் தெரிவான

# விஞ்ஞான பட்டதாரி-ஆரம்ப ஆசிரியர்

யாழ்ப்பாணம் அக் 24

கல்விச்சேவை ஆணைக்குழுவினால் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களினதும் ஆரம்ப ஆசிரியர்களினதும் பெயர்ப்பட்டியலில் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது.

மிகுதிப் பெயர்கள் இன்று வெளி வருகின்றன.

### கிளிநொச்சி

எஸ். சதாவம் (தங்கோடை) பி சத்தியராணி (வவுனியா) எஸ் சிவகௌரி (உடுவில் தெற்கு) கே. சதீஸ்வரி (சாவகச்சேரி) கே. விஜயகுமார் (நட்டான்கண்டல்) ஆர், இராஜமகேந்திரன் (கோப்பாய் தெற்கு) ஏ. ஜெகதாஸ் (இணுவில் மேற்கு) என் கேதாரநாதன் (நுணாவில் மேற்கு) கே சசிபிரபா (பேராதனை) ஆர். இரத்தின சோதி (கொக்குவில்) எம். புனிதாம்பிகை (கரணவாய் வடக்கு. எல். மனோரஞ்சிதம் (கிருலப்பனை) ரீ. கதிர்காமநாதன் (யாழ்ப்பாணம்).

### மன்னார்

ஏ. சிவானந்தன் (வட்டுக்கோட்டை) எஸ் பாக்கியநாதன் (மயிலிட்டி) பி. அகிலலோகநாயகம் (கொழும்பு 4) எஸ். ஸ்ரீகரன் (மல்லாகம்) ஜே. ஜே. மைக்கல் (மன்னார்) எல். எம். வெனிற்றே (மன்னார்)

### புத்தளம்

எஸ். சகிலா (அச்சுவேலி) கே. சுதாகர் (கரவெட்டி) எஸ் செல்வராணி (கொழும்பு 6) செல்வி ஆர் வசந்தகலா (நொச்சிமோட்டை செல்வி கே. வசந்தி (முரசுமோட்டை) சம்மத்துள் முனவரா (மன்னார்) ஆர் ஜெயாமதி (மன்னார்) செல்வி. என். கமலாதேவி (முத்தையன்கட்டு) செல்வி எம். பத்மாவதி (வவுனிக்குளம்) செல்வி எம் ரீ. புஸ்பவதி (புங்குடுதீவு 4) செல்வி செல்வராணி (தெல்லிப்பழை) ரீ சிவபாலன் (காரைநகர்) செல்வி எஸ். இராசையா (அரியாலை) செல்வி கே. ஜெகதீஸ்வரி (வறணி வடக்கு) செல்வி கே. தனபாக்கியவதி (வறணி வடக்கு) செல்வி சி மேரிடெய்சி (பெரியமடு) செல்வி ரீ. அங்கலக்சுமி (மயிலிட்டிக்கரை)

செல்வி எம். இரத்தினதேவி (விடத்தல்தீவு) திருமதி பி நித்தியதேவி (தண்ணியூற்று) திரு. ஜோசப் (ஊர்காவற்றுறை) செல்வி ஏ புஸ்பலதா (கரம்பன் மேற்கு) திரு த ஜெகானந்தராஜா (யோகபுரம்) செலவி எம் ஹேமலதா (கோப்பாய்) செல்வி பத்மா (மறிச்சான் கட்டு) செல்வி என். பங்கையற்செல்வி (துணுக்காய்) செல்வி பி கே.செல்வநந்திமாலா (முத்தையன்குடிகுளம்) செல்வி ஜே.சிவசுப்பிரமணியம் மண்டைதீவு) செல்வி எஸ்.நிர்மலகுமாரி (சுழிபுரம்மேற்கு) செல்வி ஏ. சின்னமணி ஆன் (உடுவில்).

திரு. எஸ். பாலச்சந்திரன் (மீசாலை] வஜிஉஹா தாவூட் (பேசாலை) கே. சி கைடர் (சிலாவத்துறை) எச்.எம். விக்ரோறியா குரூஸ் (வங்காலை 3) எம் ஐ எம். சகாப் (மறிச்சுக்கட்டி) செல்வி ரீ. வசந்தி கோண்டாவில் வடக்கு) செல்வி எஸ். மதிவதனி (வறணி வடக்கு) செல்வி ஏ சுகந்தினி (சாஸ்திரிகூளாம் குளம்) கே.யோகநாதன் (குஞ்சுப்பரந்தன்) செல்வி எம் சந்திரகாந்தா (வன்னேரிக் குளம்) டீ வஜிற் (பேசாலை) எம் ஜீ ஆரிப் (பேசாலை) எம் எஸ்.செய்னத்துள் முனவரு (பெரியமடு) பி குலசேகரம் (துணுக்காய்).

(இ-9)


## அறிவித்தல்

எமது இரு தாபனத்திலும் பணிபுரிந்த திரு. க. கருணாகரன், திரு. க. சண்முகநாதன் ஆகிய இருவருக்கும் இவ்விரு தாபனங்களிலும் எதுவித தொடர்புமில்லை.

இவர்களுடன் எதுவித வியாபாரத் தொடர்புகளும் இவ்விரு தாபனங்களின் பெயரால் செய்ய வேண்டாம் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றோம். இவர்களுடன் செய்யும்கொடுக்கல் வாங்கல்களுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல.

**V. வடிவேல்**
Lankem Area Deaer Deplot,
219, Power House Road,
Jaffna.

**V. VADIVEL**
142. Model Market
Hospital Road,
Jaffna.

(7538)



## லீலா

★ பஞ்சாங்க சித்திரக் கலண்டர்
★ டயறி வகைகள்

✶ புதுப் பொலிவுடன் வெகு விரைவில் வெளிவரும்

இதுவரை ஆடர் அனுப்பாத வியாபார அன்பர்கள் அனைவரையும் விலைப்பட்டியல்களை எழுதிக் கேட்டுத் தங்கள் ஆடரை அனுப்பி வைத்து லீலா கலண்டர் டயறிகளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பதிப்பு:
**நியூ லீலா அச்சகம்,**
'சின்னத்துரை மாடிக்கட்டிடம்'
182, மெசஞ்சர்வீதி,
கொழும்பு-12
தொலைபேசி; 25930;

விநியோகம்:
**72 G, பீப்பிள்ஸ் பார்க்**
நவீன சந்தை,
கொழும்பு-11
தொலைபேசி: 540842.


# மக்கத்து ரோஜா மலர்ந்த நன்னாள்

இன்று திங்கட்கிழமை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்ததினம் ஆகும் இதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

**ஆதி** மனிதன் ஆதம் (அலை) அவர்கள் முதல் தொடர்ந்து வந்த அல்லாஹ்வின் இறை தூதர்களுள் இறுதித் தூதராக மக்கமா நகரினிலே கி பி. 571 ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி அதாவது இற்றைக்கு 1417 ஆண்டுகளின் முன் குறைஷி வம்சத்தில் அன்னை ஆமினாவுக்கும் தந்தை அப்துல்லாவுக்கும் மகனாக இப் இப்பாருலகில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பிறந்தார்கள்.

அன்னவர் பிறந்த ஆண்டில் யவன் தேச அதிபதி அப்ரஹா கஃபதுல்லாவை அழிப்பதற்கு யானைப்படை ஒன்றைத் திரட்டிவந்ததின் காரணமாக (ஆமுல் பீல்) யானை ஆண்டு எனவும் அவ்வாண்டு அழைக்கப்படுகின்றது

### பஞ்சமா பாவங்கள்

மேலும் அக்கால மக்கா வாசிகள் பஞ்சமா பாவகங்கள் என வர்ணிக்கப்படக்கூடிய சகல பாவங்களையும் அஞ்சாமல் செய்து வந்தார்கள்.

அதாவது மதுவைப் பொறுத்தமட்டில் எவனது வீட்டில் மிகவும் பழைமையான மது இருக்கின்றதோ அவனே அப்பகுதி மக்களிடம் மதிப்புப் பெற்றவனாக இருப்பான்.

மாதர்களை எடுத்துக் கொண்டால் அவர்களை மிக இழிவாக மக்கத்து ஆண்கள் நடத்தியும் மதித்தும் வந்தார்கள்,

தங்கள் இச்சைகளை மாத்திரம் தீர்ப்பதற்கு அவர்களைப் பயன்படுத்திக் கொண்டார்களே தவிர அப்பெண்களுக்கு உரிய உரிமைகளை அன்நாட்டு ஆண்கள் கொடுக்கத் துணியவில்லை.

எந்த அளவுக்கு அவர்கள் உரிமைகளை இவர்கள் பறித்துக் கொண்டார்கள் என்றால் அந்நாட்டுப் பெண்கள் வாழ்வதா? மாள்வதா? என்பது கூட அந்நாட்டு ஆண்களே நிச்சயித்தார்கள்.

ஏனெனில் பெண்களை அவர்கள் உயிரோடு புதைக்கும் அளவுக்கு அவர்கள் கொடியவர்களாய் இருந்தனர்.

மற்றைய கொலை, சூது களவு ஆகிய பாவங்களும் அவர்களிடம் மலிந்து கிடந்தன

எனவே அக்காலத்தில் எந்த நாட்டு அரசர்களும் அந்த நாட்டை ஆளத் துணியவில்லை

மேலும் வரலாற்று ... (அப்பாஸ்) ஜாஹிலிய்யா) அறிய ...மைக் காலம் என வர்ணிக்கின்றார்கள்.

இப்பஞ்ச மாபாதகர்களின் மத்தியிலேயே சேற்றில் முளைத்த செந்தாமரை போல் எம் பெருமானார் (ஸல்) மலர்ந்தார்கள்.

### ஸல் பெருமானார் தோற்றம்

எம் பெருமானார் (ஸல்) அவர்கள் பிறந்தவுடன் அரேபிய வழக்கப்படி ஹலீமா எனும் செவிலித் தாயிடம் ஒப்படைக்கப்பட்டார்கள்

ஆடு மேய்ப்பதே ஹலீமா குடும்பத்தாரின் தொழிலாக விளங்கியதாலும் அந்நாட்டு அரபிகள் மத்தியில் படிப்பறிவற்ற சூழ்நிலை காணப்பட்டதனாலும் நாயகம் (ஸல்) அவர்கள் கல்வி அறிவு பெறுவதற்கான சூழ்நிலை காணப்படவில்லை

## எம். எல். எம். றிலா

இளவயதினிலேயே தயவு, தாட்சண்யம், பெரியோரைப் பேணுதல். சிறுவர் மீது அன்பு பாராட்டுதல், உண்மை உரைத்தல். அடக்கம், உரைத்த வாக்கை நிறைவேற்றல் போன்ற பல நற்குணங்கள் அவர்களிடம் காணப்பட்டன

பல கெட்ட சூழ்நிலைகளின் மத்தியிலும் அவர்களிடத்தில் பல நற்குணங்கள் காணப்பட்டமை பார்ப்போரை பரவசத்தில் ஆழ்த்தியது.

### வியாபாரப் பயணம்

தமது ஒன்பதாம் வயதில் தமது சிறிய தந்தையாராகிய அபீதாலிவுடன் காருண்யக்கடல் கருணை நபி (ஸல்) அவர்கள் முதன் முதலாக சிரியாவுக்கு வியாபாரத்திற்காகச் சென்றார்கள்.

கதீஜா எனும் சீமாட்டி அரேபியாவிலும் ஏனைய தேசங்களிலும் செல்வத்தால் செழித்திருந்தார்கள்.

கதீஜாவின் வேண்டுகலின் பேரில் அவர்களின் பொறுப்பாளராக நாயகம் (ஸல்) அவர்கள் சிரியாவிற்கு வியாபாரத்திற்குச் சென்றார்கள்

காலப்போக்கில் தம் மனதை ரஸூலே கரீம் (ஸல்) அவர்களிடம் பறிகொடுத்த கதீஜா நாயகி அவர்கள் தமது 40 ஆவது வயதில் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு 25 வயதாக இருக்கும் போது மணம் செய்து கொண்டார்கள்.

நாயகம் (ஸல்) அவர்களின் நற்குணங்கள் மத்தியில் தங்கள் உள்ளங்களை பறிகொடுத்த மக்கள் தமது பொருட்களை அவர்களிடம் ஒப்படைத்து பாதுகாத்துக் கொண்டார்கள்.

எனவே அவரை 'அல் அமீன்' நம்பிக்கைக்குரியவர் ... பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்கள்.

### ஒதும்படி அழைப்பு

கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் தனிமையில் ஹிரா குகையில் அனேகமான நேரத்தை இறைவனைப் பற்றியும் அவன் படைப்புகளைப் பற்றியும் சிந்திப்பதில் கழிப்பார்கள்.

இவ்வாறு தியானித்துக் கொண்டிருக்கையில் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஒரு நாள் தோன்றி "முஹம்மதே ஓதுவீராக" என்றார்கள்.

திரு நபி (ஸல்) "கல்வியறிவற்ற நான் யாதை ஓதுவது" என ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் வேண்ட "ஆண்டவன் பெயரால் ஓதுவீராக" எனக் கூறினார்கள்.

இவ் வேளையிலேயே முதன் முதலாக இக்ரஹ் ஓதுவீராக" என ஆரம்பிக்கப்படும் ஆயத்து வழங்கப்பட்டது

அப்போது நபி (ஸல்) அவர்களுக்கு 40 வயதாக இருந்தது

இதன் பின் கதீஜா அம்மையார் முதன் முதலாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

இரண்டாவதாக அலி (ரலி) அவர்களும் தொடர்ந்து நாயகம் (ஸல்) அருமைத் தோழரும் முதலாவது கலீபாவுமான அபூபக்கர் சித்தீக் [ரலி] அவர்களும் இஸ்லாத்தை ஏற்றனர்.

### இஸ்லாத்தைப் பரப்பும் வேளையில்

இதனைத் தொடர்ந்து இஸ்லாத்தைப் பரப்பும் முயற்சியில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் ஈடுபட்டார்கள்.

இவ்வேளைதனில் மக்கத்துத் தலைவர்கள் இவர்களுக்கு சொல்லொணாத் துன்பங்களை இழைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

எனினும் "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்பதற்கேற்ப தொடர்ந்து முயற்சிகள் நடைபெற்ற வேளையில் அபிதாலிபிடம் அம்மூடர்கள் சென்று "உமது மகனை அடக்கி வையும்" என்று எச்சரித்துச் சென்றனர்.

அம் மக்கள் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் சென்று உலக ஆசைகளைக் காட்டி இவ் உயர் தரமான பணியை விட்டுவிடக் கூறினர்.

அதற்கு எம் பெருமானார் (ஸல்) அவர்கள் "என் வலக்கரத்தில் சூரியனையும், இடக்கரத்தில் சந்திரனையும் கொண்டு வந்து வைத்தாலும் கூட இப்புனித பணியை விடமாட்டேன்" என இடித்துரைத்தார்கள்.

மேலும் தீயவர்கள் அட்டூழியங்கள் தொடர்ந்தது.

எனினும் இஸ்லாத்தின் மகிமை அறிந்தோர் அதனில் ஆசையோடும் ஆர்வத்தோடும் இணைந்து கொண்டார்கள்.

### மக்கத்துவாசிகள் சதி

இஸ்லாம் நாடெங்கும் வேர் ஊன்றத்தொடங்கியது.

ஆனால் மக்கத்து வாசிகளோ இஸ்லாத்தையும் அதனோடு இணைந்தவர்களையும் ஒழித்துக்கட்டச் சித்தமாயினர்.

இவ் வேளையில் எம் பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சிலரை அபிசினியாவிற்குச் செல்லும்படி வேண்டினார்கள்.

இச் செய்கைகளைக் கண்ணுற்ற குறைஷிக் குலத்தார் சீற்றம் கொண்டு பெருமானார் அவர்களையும் அவரது குடும்பத்தாருள் சிலரையும் அதாவது பனூ ஹாசிம் கோத்திரத்தினரையும் சமூக, பொருளாதார அரசியல் ரீதியான சகல தொடர்புகளையும் துண்டித்து "ஷிஃபு அபு தாலிப்" எனும் பள்ளத்தாக்கில் தங்க வைத்தார்கள்.

இந் நிலைமைகள் சில நாட்களில சீராகின எனினும் இக் காலகட்டத்தில் நாயகம் (ஸல்) அவர்களின் அருமை மனைவி கதீஜா நாயகியும் பெரிய தந்தை அபூதாலியும் மரணமெய்தினார்கள்

இக் காலத்தை 'ஆமுல் ஹுஸ்ன்) துக்க ஆண்டு என்று வர்ணிக்கப்படுகிறது. இந் நிகழ்ச்சி நடைபெறும் போது நாயகம் (ஸல்) அவர்களுக்கு 50 வயதாக இருந்தது

இதன் பின் நபி ஸல்) அவர்கள் 'தாயிப்'' நகருக்குச் சென்று இஸ்லாத்தைப் போதித்தார்கள்.

அங்கும் அவர்களுக்கு துன்பங்கள் இழைக்கப்படவே நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் மக்காவை வந்தடைந்தார்கள்,

### அல்பா உறுதி மொழி

எனினும் தமது இஸ்லாமியப் பிரசாரத்தை அவர்கள் கைவிடவில்லை.

வெளியூர்களில் இருந்துவருபவர்களிடம் இஸ்லாத்தை போதனை செய்தார்கள்.

இதனால் மதினாவைச் சேர்ந்தவர்கள் இஸ்லாத்தை ஏற்றனர்.

எனவே அங்கும் இஸ்லாம் பரவத் தொடங்கியது.

இவ் அடிப்படையில் பன்னிரண்டு பேர் கொண்ட ஒரு குழுவினர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதுடன் அதனை சரிவரப் பேணுவதாக நபி [ஸல்] அவர்களுக்கு உறுதிமொழி உரைத்தார்கள்

இதனை "அக்பா உறுதிமொழி" என அழைக்கப்படுகின்றது

இக் காலகட்டத்திலேயே நானிலம் போற்றும் நாயகம் [ஸல்] அவர்கள் ஜிப்ரீல் [அலை] அவர்களுடன் ஓர் நள்ளிரவில் 'மிஃறாஜ்' பயணத்தை மேற்கொண்டு நரகம். சுவர்க்கம் போன்றவற்றை கண்டு வந்ததுடன் ஐங்காலத்தொழுகையையும், இஸ்லாமியப் பணியை வழிநடாத்திச் செல்வதற்கான மனோபக் குவத்தையும் பெற்று வந்தார்கள்

இஸ்லாத்தின் துரித வளர்ச்சியைக் கண்ணுற்ற மக்கா வாசிகள் அதனை அழிக்கத் திட சங்கர்ப்பம் பூண்டனர்.

முக்கியமாக அபூசுபியான் முஹம்மத் (ஸல்) அவர்களைக் கொல்லத் திட்டமிட்டான்.

இக் காலகட்டத்தில் மதினாவில் இஸ்லாமியர்களின் தொகை அதிகரித்தது.

எனவே அங்குள்ளவர்கள் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு முழு ஒத்துழைப்பையும் நல்குவதாகவும் பெருமானார் அவர்களை பாதுகாப்பதாகவும் உறுதி உரைத்தனர்.

இது இரண்டாம் "அல்பா உறுதிமொழி" எனப்படும்.

### ஹிஜ்ரத்

மக்காவில தொல்லைகள் அதிகரிக்கவே சில முஸ்லீம்கள் மதீனாவிற்கு நபி (ஸல்) அவர்களை அனுபவைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து ஓர் இரவில் அபூசுபியாவின் கூட்டத்தார் இறுதித் தூதரை கொல்ல வந்த சமயத்தில் அதனை அறிந்த நபி ஸல்) அவர்களும் அபூபக்கர் (ரலி) அவர்களும் மதீனா பயணமானார்கள்

இதனையே 'ஹிஜ்ரத்' என அழைக்கின்றோம்.

இதில் இருந்தே இஸ்லாமிய வருடம் கணக்கிடப்படுகின்றது.

இதன் பின் மதீனாவில் 'மஸ்ஜிதுன் நபவி' நிறுவப்பட்டது.

மக்காவைத் துறந்து மதீனா வந்தவர்களை 'முஹாஜிரீன்கள்' என்றும் மதீனாவில்வரவேற்று உதவியவர்களை 'அன்ஸார்கள்' என்றும் அழைப்பர். அப்பொழுது நாயகம் (ஸல்) அவர்களுக்கு 53 வயதாக இருந்தது.

### மக்கா வெற்றி

மதீனாவை தலைமைப் பீடமாகக் கொண்டு இஸ்லாம் மிக வேகமாக பரவியதைத் தொடர்ந்து மதீனாவை நோக்கி மக்கத்து வாசிகள் போர் தொடுத்து வந்தனர்

முஸ்லிம்களும் எதிர்த்து போரிட்டு பல தடவைகள் வெற்றியடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து 'ஹுதைபியா' உடன்படிக்கை மக்கா வாசிகளுடன் முஸ்லிம்களால் செய்து கொள்ளப்பட்டது

இதனை இருவருடங்களில் மக்காவாசிகள் மீறவே அவர்களோடு முஸ்லிம்கள் போர் தொடுத்து மக்காவை கைப்பற்றினர்.

இதுவே "பத்ஹ் மக்கா" மக்கா வெற்றி எனப்படுகிறது.

நபிரவர்கள் மீண்டும் மக்கா திரும்பினர்.

அரபு நாடுகளில் இஸ்

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்து விற்பனையாகின்றது

PRACTICE TEST PAPERS FOR

G.C.E.O/L ENGLISH I & II

New Syl.

முழுப் பாடத்திட்டங்களையும் அடக்கிய

மாதிரி வினாக்கள்

ஆசிரியர் :

T. தெய்வதவபாலன்

கிடைக்குமிடம்:

பூபாலசிங்கம் புத்தகசாலை

(7374) யாழ்ப்பாணம்.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22-06-1934

மறைவு 24-10-1986

திருமதி

**இராஜேஸ்வரி தியாகராஜா**

(ஆசிரியை)

அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஈராண்டுகள் ஓடி மறைந்தன எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் மனதைவிட்டு அகலா உங்கள் ஆத்மா இறைவனடியில் சாந்தியடைய இடைவிடாது பிரார்த்திக்கின்றோம்

கணவர், பிள்ளைகள்.

18, அம்மன் வீதி,
சுந்தர்மடம். [7394]

## ஓராண்டு நினைவஞ்சலி



தர்மலிங்கம் கணேஷலிங்கம்

தோற்றம்: 30 - 08 - 1939 மறைவு: 24 - 10 - 1987

திதி: 10 - 11 - 1988

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ" என ஆறுதல் கூறினாலும் பெற்ற மனம் ஏற்கவில்லை என் செல்வமனே! தந்தை இறந்ததும் அத் தானத்தை சிறப்போடு வகித்து அன்போடு சகோதரர்க்கு அள்ளிக்கொடுத்த வள்ளலை என்றென்றும் மறவோம்.

தாய்,
சகோதர, சகோதரிகள்.

599, நாவலர் றோட்,
நல்லூர். (7405)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு தா.க. சின்னத்துரை**

(கொக்குவில் கிழக்கு)


தோற்றம்: 23.9.1910 மறைவு: 24.9.1988

எங்கள் இதயத்தில் என்றும் நீங்காது நிலைத்து நிற்கும் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு என்றும் எம்மைவிட்டு அகலாது உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்.

சி.பஞ்சாட்சரம்
எல்லை வீதி,
சுன்னாகம். (7537)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**முத்துத்தம்பி ஐயாத்துரை**

தோற்றம்: 19. 01. 1913 மறைவு: 24. 9. 1988

எம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! இறைவன் திருவடியில் உங்கள் ஆத்மா சாந்தி அடைய கண்ணீர்ப் பூக்களினால் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

பொலீஸ் நிலையஒழுங்கை,
சாவகச்சேரி. (7289)

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 09-03-1908

விண்ணில்: 05-11-1987

திதி: 24-10-1988



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த

**திருமதி பார்வதிப்பிள்ளை கந்தப்பிள்ளை**

கண்ணிமைக்கும் நேரத்தில்
எம் கண்களையே குளமாக்கி
கடும் தவம் புரிந்து— நீயும்
கழலடி சேர்ந்தாயோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர்: சண்முகம் கந்தப்பிள்ளை
மக்கள்: க. நாகரெத்தினம் (பேளின்)
க. விசாகரெத்தினம் (யாழ். பல்கலைக்கழகம்,)
மருமக்கள்: ந. [illegible]
வி. வசந்தாதேவி.

(7294)

இ. தொ. காவின் வேண்டுகோளை அடுத்து

# பாவற்குளம் பகுதிக்கு படையினர் பாதுகாப்பு

வவுனியா, அக் 23

வவுனியாவிலுள்ள பாவற்குளம் என்ற கிராமத்துக்கு இந்திய அமைதிப்படை பாதுகாப்பு வழங்கியிருக்கிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வட மாநில பொறுப்பதிகாரி திரு. எஸ். மதுரப்பிள்ளை மேற்படி கிராமத்துக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்று இந்திய அமைதிப்படை அதிகாரியைக் கேட்டுக் கொண்டதை அடுத்தே பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

பாவற்குளம் கிராமம் அண்மையில இலங்கை இராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளானதைச் சுட்டிக் காட்டி அவர் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்குமாறு கோரியிருந்தார். (இ-ஜ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



புங்கைநகர்

**பெரியதம்பி நாகலிங்கம்**

முகாமையாளர்
[வெள்ளி விலாஸ் கே. கே. எஸ் றோட் யாழ்ப்பாணம்]

மண்ணுலகில் 11-03 1923 விண்ணுலகில் 24-10-1987

எங்கள் எல்லோருக்கும் வளமான வாழ்வளித்த தெய்வமே! எமக்கு நல்வழி காட்டி, அன்பு அறநெறி, பண்பு பாசத்துடன் வாழ்ந்த தெய்வமே, எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில் அகல் விளக்காய் அணையாத் தீபமாய் என்றும் ஒளிர்கிறது.

மீளாத்துயில் கொண்டாலும் உங்கள் நினைவை என்றும் நினைவில் நிறுத்துகிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனை இறைஞ்சுகிறோம்.

என்றும் உங்களை நினைவு கூரும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்கள்,

மடத்துவெளி,
புங்குடுதீவு-8 (7413)

## முதலாம் வருட நினைவஞ்சலி



திரு நையிற் செல்வத்துரை கிருபைராசா

தோற்றம்: 03 - 05 - 1928 மறைவு: 24 - 10 - 1987

ஆண்டவரே தேவரீர் தலைமுறை
தலைமுறையாக எங்களுக்கு-
அடைக்கலமானவர்
சங்கீதம் 90:1

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி தேவராச்சியத்தில் ஆனந்த பரவசத்துடன் சேர்ந்திருக்கும் எங்கள் அன்புத் தெய்வமே! இறைவன் திருவடியில் உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர் மல்கிய மலர்களினால் அஞ்சலி செலுத்திப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மாமி, தாய்.
சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளைகள்.

திருமதி எஸ். கிருபைராசா,
[illegible]
சேச் றோட்,
[illegible] (7524)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பதவி வெற்றிடம்

தொழில் நுட்பவியலாளர் தரம் II பிரிவு 'அ' பதவிக்கான விண்ணப்பங்கள் 1988, கார்த்திகை 21 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**பதவி**

தொழில் நுட்பவியலாளர் தரம் II பிரிவு 'அ'

1. இலத்திரன் தொழில்நுட்பவியலாளர்- பௌதிகவியல்
2. வேலைக்கள பொறிமுறைத் தொழில் நுட்பவியலாளர் - பௌதிகவியல்
3. ஆய்வுகூடத் தொழில் நுட்பவியலாளர் - பௌதிகவியல்
4. இலத்திரன் தொழில் நுட்பவியலாளர் - கம்பியூட்டர் அலகு

**சம்பள அளவுத்திட்டம்:**

ரூ. 1880 - 3x40; 8x50 - 2400 மாதமொன்றிற்கு

**தகைமைகள்:**

(அ) சிறப்புத் தேர்ச்சிபெற்ற உரிய துறையில் தொழில் நுட்பவியலில் தேசிய டிப்ளோமா அல்லது அதற்குச்சமனான தகைமை.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பெற்ற நிறுவனமொன்றில் தொழில் நுட்பவியலாளராக பத்தாண்டுகளுக்கு பொருத்தமான அநுபவம்.

**குறிப்பு:**

3. இலத்திரனியலில் அறிவுடைய அல்லது இலத்திரன் கருவிகளைப் பழுதுபார்ப்பதில் அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

4. இலக்க இலத்திரனியல் அறிவுடன் கம்பியூட்டர் கருவிகளைப் பழுதுபார்ப்பதில் அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**வயது:** 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது

**தெரிவு:**

செய்முறைப்பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும் நடைபெறும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.


**பதில் பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(C/412)


# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள்,
அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லி.

Pfizer

சில்லறை விலை ரூ.39/90 200 மி. லி.

® பைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Grant BJK&E PFL 1157


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமான ரிக்கட் குறைந்த விலையில்

தொடர்பு:

**DILKA TICKETING SERVICE**

**STUDIO DILICA BUILDING**

BUS STAND, JAFFNA.

(7529)



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்

வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

**கம்பியூட்டர் கல்வி**

● **COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE**

பயிற்சிக் காலம்:- 40 நாட்கள். கட்டணம் :- 950/-
(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)
ஆரம்பம்: 28 - 10 - 88 [திங்கள், புதன், வெள்ளி] வகுப்புகள்

BASIC LANGUAGE கற்றவர்களுக்கான

● **COMPUTER PROGRAMMING IN COBOL LANGUAGE**

பயிற்சிக் காலம்: 3 மாதம். கட்டணம்:. 1,500/
(பகுதி பகுதியாகச் செலுத்தலாம்)
ஆரம்பம்: 29 - 10 - 88 [சனி, ஞாயிறு வகுப்புகள்]

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி I B M (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும் பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
★ குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார் களாகையால், விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்து கொள்ளவும்.

**UNIKCO COMPUTER CENTRE**

No. 5, மின்சார நிலைய வீதி,
(உபதபாற் கந்தோர் அருகாமை)
2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(C/ 592)



**சரியான நிறை தவறாது காட்டும்**

**யூனியன்**

**மேடைத் தராசுகளை**

**சிங்கர்**

**விநியோகிக்கிறது!**



யூனியன் சரியான நிறையைத் தவறாது காட்டுபவை. உலகப் புகழ் வாய்ந்த சிங்கர் நிறுவனம் இந்த உன்னத தராசுகளின் ஏக விநியோகத்தைப் பொறுப்பேற்றுள்ளது.

யூனியன் 250 கிலோ மேடைத் தராசுகள் இப்பொழுது மேலும் நவீனத்துவம் பெற்றுள்ளன. வெப்பத்திற்குத் தாக்குப் பிடிக்கும் நுட்ப உறுப்புகளும் நீண்ட காலம் உழைக்கும் திறனும் கொண்ட அவை இலங்கை அளவை நிறுவைப் பண்டியகத்தின் அனுமதி முத்திரையைப் பெற்றவை.

சகல சிங்கர் விற்பனை நிலையங்களிலும் வாங்கலாம்.

எடை அளவெல்லை
அளவுத் திறன் 250 கி.கி. அளவுக் கூறுகள் 10 கி. கி x 100 கி.

நீங்கள் தவணைக் கொடுப்பனவு அடிப்படையிலும் வாங்கலாம்.

விவசாயப் பிரிவு
**சிங்கர்**
மாசற்ற மேன்மை

விலை: ரு. 11,215/-

Minds/SA/5

**சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.**


# ஆஸ்பத்திரியில் பெறக்கூடிய மருந்தையே டாக்டர்கள் எழுதிக்கொடுக்க வேண்டும்

## சுகாதார அமைச்சர்கள் ஆலோசனை

நோயாளருக்கு ஆஸ்பத்திரியில் பெறக்கூடிய மருந்தையே டாக்டர்கள் எழுதிக் கொடுக்க வேண்டும்; வெளியில் போய் வாங்க வேண்டிய மருந்தை எழுதிக் கொடுக்கக் கூடாது.

இவ்வாறு சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து தெரிவித்தார்.

ஆஸ்பத்திரியில் தேவையான மருந்து வகைகள் உள்ளன.

உலக சுகாதார ஸ்தாபன அறிக்கையின் படி 20 அடிப்படை மருந்து வகைகள் இருக்கவேண்டும். ஆனால் எமது ஆஸ்பத்திரிகளில் 80 வகையான மருந்து வகைகள் உள்ளன.

ஆகவே நோயாளர் மருந்து வாங்க வேண்டிய அவசியமில்லை.

ஆஸ்பத்திரிகளில் கடித உறைகளில் (என்பலப்புக்களில்) மருந்துகளை வைத்து நோயாளருக்கு வழங்கும் திட்டம் ஒன்றை நாம் அறிமுகப்படுத்தி உள்ளோம்.

இப்படி அமைச்சர் தெரிவித்தார். (இ-எ)

# தென் மாகாண சபை அமைச்சர் வீடு மீது சூடு!


கொழும்பு அக் 24

தென் மாகாண சபை அமைச்சர் ஒருவரின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் என்று அறிவிக்கப்பட்டது

காவலுக்கு நின்றபாதுகாப்பு அதிகாரிகள் திருப்பிச் சுட்டனர். இனந்தெரியாதநபர்கள் அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டனராம்

அமைச்சரான திரு. பியதிலக ரத்னசேகர அவர் வீட்டில் இருந்தார். அவருக்குக் காயம் ஏற்படவில்லை. வீட்டுக்குச் சிறிது சேதம் ஏற்பட்டது. (ஒ-எ)

# ★ ஓராண்டு நினைவஞ்சலி ★



வேலணை மேற்கு

**அமரர் திரு. சின்னத்தம்பி இராசசேகரம்**

பிறப்பு: 2 - 7 - 1918



யாழ் நகர்

**திருமதி ரஜனி ரவீந்திரன்**

(இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

பிறப்பு: 9 - 1 - 1958



லண்டன் கேற்றன் வீதியைச் சேர்ந்த

**திரு. சேனாதிராசா ஸ்ரீவரதராசா**

**திருமதி நீலாம்பிகை ஸ்ரீவரதராசா**

பிறப்பு: 6 - 3 - 1949

பிறப்பு: 3 - 1 - 1951



லண்டன் கேற்றன் வீதியைச் சேர்ந்த

**செல்வன் ஸ்ரீவரதராசா தர்சன**

**செல்வி ஸ்ரீவரதராசா நர்மிளா**

பிறப்பு: 6 - 1 - 1982

பிறப்பு: 19 - 1 - 1984

இளநொச்சியைச் சேர்ந்த

குருகுல நிர்வாகியும், சமூகத்தொண்டருமாகிய

**திரு. வேலுப்பிள்ளை கதிரவேலு**

**திருமதி கதிரவேலு சின்னம்மா**

**அழிப்பு: 24-10-1987** **இராச வீதியில்** **திதி: 11-11-1988**

உடல்கள் எம்மை விட்டு நீங்கி ஓராண்டு சென்றாலும் உயிர்கள் எம்முடன் உறவாடிக்கொண்டு தான் இருக்கின்றன. உங்கள் அனைவரதும் ஆத்மாக்கள் சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்பதைவிட வேறு என்ன செய்ய முடியும்.

உங்கள் பிரிவால் வாடும்:

அம்மா, மனைவி, கணவன், சகோதர, சகோதரிகள், மாமா, மாமி, மருமக்கள், மைத்துனிமார், பெருமக்கள், மைத்துனர்கள், மகன் கிரிசன்.

11/20, ... ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(7415)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு:
20 - 03 - 1967

உதிர்வு
15 - 10 - 1987



**திருமதி ரஜனி தேவசிகாமணி**
(கோப்பாய் வடக்கு, கோப்பாய்)

அன்பாய் பேசியே பண்பாகப் பழகிவந்தாய்
இன்ப வாழ்வாம் இல்லறமும் ஏற்றுவந்தாய்
நன்மகளாய் ஓர் பெண்மகளும் பெற்று உவந்தாய்
நன்றே எம்முடன் கடமையும் ஆற்றிவந்தாய்
உன்னுயிர் பறிக்க காலனை ஏவினனோ கொடுங்கோலான்
பன்னிரு மாதங்கள் பறந்தோடி விட்டாலும்
உன்னினிய வார்த்தைகளும் - புன்சிரிப்பும்
என்றும் எம்மவர் உள்ளங்களில் நிலைத்திருக்கும்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி.

ஸ்ரீராம்ஸ் நிறுவன ஊழியர்கள்,
குடும்பத்தினர்.

இருபாலை, கோப்பாய் (7409)

## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் திரு. சிவலிங்கம் கறுப்பையா**

ஆண்டவன் படைப்பு 1930-01-05
அழிப்பு 1987-10-24

திதி: 1988-11-11 வெள்ளிக்கிழமை

எல்லோரிடத்திலும் அன்புடனும் பாசத்துடனும் பழகுவதோடு அல்லாமல் எல்லோர் மனதிலும் நிலைத்து நிற்கும் தெய்வமாகிய உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

மனைவி: சமலாம்பிகை கறுப்பையா
பிள்ளைகள்: ரவீந்திரன், ஜெபக்குமார், சாந்தி, பாரதிராஜன்.

ரவீந்திரா காப்பென்ரி வேக்சொப்
70, கன்னாதிட்டி வீதி,
சிவன் கோவிலடி,
யாழ்ப்பாணம். (7411)

## மன்னார் பகு உ. அ. அதிபர்

மன்னார் பகுதி உதவி அரசாங்க அதிபராக திரு. த. இராமலிங்கம் நியமனம்பெற்றுள்ளார்.

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கோப்பாய் உ.அ. அதிபர் பணிமனையில் பரிபாலன அலுவலராகக் கடந்த 5 ஆண்டுகள் கடமையாற்றினார்.

மன்னார் கச்சேரி காணிப் பகுதி அலுவலகத்தில் பிரதம எழுதுவினைஞராக 8 ஆண்டுகள் கடமையாற்றினார்

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி கற்ற இவர், கொழும்பு சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை உறுப்பினராகவும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பணியாளராகவும் கடமையாற்றினார். (இ)

## மீலாத் விழா

யாழ். தைக்கா வீதி மீலாத் விழாக் குழுவின் ஏற்பாட்டில் நாளை மீலாத் விழா ஒன்று நடைபெறுகிறது.

மன்பஉல் உலூம் பாடசாலை அதிபர் ஜனாப் என். எம் ஷாபி நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் மௌலவி அல்ஹாஜ் எம். ஐ. அப்துர்ரஸ்ஸாக், முஸ்லிம் விவாகப் பதிவாளர் மௌலவி பீ. கே மீரான்முஹியித்தீன் ஆலிம் ஆகியோர் பிரதம அதிதிகளாய் பங்குபற்றுவார்கள்.

மௌலவி எஸ். சதகதுள்ளா, மௌலவி எம். எம். மஃரூப், மௌலவி கே. பீ. நஸார்தீன், மௌலவி எஸ். எச். கலீலுர்ரஹ்மான், மௌலவி அல்- ஹாஜ் எம்.எ. நாகிப், மௌலவி எம். எஸ். செய்யித் முஹம்பத் ஆகியோர் உரையாற்றுவர்கள்.

அறிவுக் களஞ்சியம், கிரு அத் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கும் வைபவமும் இஸ்லாமிய இன்னிசைக் கீதங்களும் விழாவில் இடம்பெறும். (உ)

## இராஜினாமா வாபஸ்

அண்மையில் பதவியிலிருந்து இராஜினாமா செய்த மட்டக்களப்பு பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. செழியன் பேரின்பநாயகம் தனது இராஜினாமாவை வாபஸ் பெற்றுள்ளார். (உ-21)



## ஓய்வு பெறுகிறார்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் நூற்றி அறுபத்தைந்து வருடகால வரலாற்றிலேபன்னிரண்டாவது அதிபராகப் பணியாற்றிய திரு. இராஜன் கதிர்காமர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

பதவியில் இருந்து ஓய்வு பெறும் திரு ராஜன் கதிர்காமர் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் மருதனா மடத்தில் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்துக்கு அருகில் அமைந்துள்ள கிறிஸ்தவ இறையியல் கல்லூரிப் பதிவாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும் பம்பலப்பிட்டி திருக்குடும்ப ஆச்சிரமத்திலும் கல்கிஸ்ஸை புனித தோமையா பாடசாலையிலும் இடைத்தரப்படிப்பைச்செரம்பான் அங்லோ சைனீஸ் பாடசாலையிலும் பெற்றார்.

இரண்டாவது யுத்தம் முடிந்ததும் மலாயாவிலிருந்து இலங்கை திரும்பி யாழ்ப்பாணக் கல்லூரியில் மலாயாவிலிருந்து இலங்கை திரும்பிய மாணவர்களுக்கான விசேட வகுப்பில் சேர்ந்து இலண்டன் மெற்றிக்குலேசன், இலண்டன் இன்றர்சையன்ஸ் பரீட்சைகளில் சித்தி எய்தினார்.

1951 ஆம் ஆண்டு சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றபின் 1953 இல் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் கடமை ஆற்றும் போது இவர் மதத்திற்கும் சமூகத்திற்கும் ஆற்றிய பணிகள் அளப்பெரியன.

இலங்கையின் தேசிய மாணவகிறிஸ்தவசம்மேளத்தின் தலைவராகவும் 1960 ஆம் ஆண்டில் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்குச் சென்று ஈழத்தின் கிறிஸ்தவ சமூகத்தின் சார்பில் உரையாற்றினார்.

1955 ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் தேசத்திற்கும் 1961 — 1963 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமெரிக்காவிற்கும் சென்று ஈழத்து கிறிஸ்தவ பண்பாடுகளை அங்கு பறைசாற்றினார்.

இவர் அமெரிக்காவில் இருந்த காலத்தில் உயர்தரமதக்கல்விக்கான திட்டத்தைப் கற்றுத்தேறி அதற்கான பட்டத்தையும் பெற்றுக் கொண்டதுடன் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான கல்வித் துறையில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

1967 ஆம் ஆண்டு உப அதிபர்ராக நியமிக்கப்பட்ட இவர் 1968ஆம் ஆண்டுடிசம்பர்மாதம்கல்லூரி அதிபராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

திரு. இராஜன் கதிர்காமர் கல்லூரி அதிபராகப் பணியாற்றத் தொடங்கியதில் இருந்து யாழ்ப்பாணக் கல்லூரி [illegible] எனலாம். (இ-ச)

## நோர்வே பயணமானர்

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த செல்வன் வரதராஜா ஞானசம்பந்தன் கணிதத்துறையில் (விஞ்ஞானமாணி) பட்டப்படிப்பிற்காக (எம்.எஸ்.ஸி) புலமைப்பரிசில் பெற்று நோர்வே நாட்டின் ஒஸ்லோ பல்கலைக் கழகத்துக்குச் சென்றார்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழக கணிதத்துறை உதவிவிரிவுரையாளரும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவருமாவார். (ஒ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. கந்தையா நடராஜா**
(பிரபல கணக்காளர்)

தோற்றம்: 05- 10- 1929
மறைவு. 04- 11 1987

திதி: 24- 10 - 1988

அன்பின் உருவாய், பண்பின் பிறப்பிடமாய் பாசத்துடன் எமையெல்லாம் வழி நடத்திச்சென்ற எமது அன்புத் தெய்வமே! உம்மை வருத்தி எம்உயர்வுக்காக ஒளி பரப்பி எம்மையெல்லாம் கண்ணை இமை காப்பது போல் காத்தீரே! ஆனல் நாமிங்கு இல்லாத நேரத்திலே மீளாத்துயில் சொண்ட எம் குல விளக்கே! ஆண்டொன்று போனது தான், ஆனல் உம் நினைவுகளோ எம்மை விட்டு அகலாது.

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

(7424)

## சுகாதார விதிமுறைகளை கைவிடுவதால் ஏற்படும் பாதிப்பு

### கருத்தரங்கில் கல்வியதிகாரி விளக்கம்

மானிப்பாய், அக். 24

சுகாதார விதிமுறைகளை சரிவர அனுசரிகத் தவறுவதால் குடும்ப ஆரோக்கியம் மிகவும் பாதிப்படைகின்றது. நாகரிகம் என்ற பெயரால் நாம் முன்னோர்கள் காட்டிய சுகாதார வழிமுறைகளை விட்டு விலகுகின்றோம்; போஷாக்கான உணவுகளை ஒதுக்கி விடுகின்றோம்.

நவாலி கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தினரால் நடத்தப்பட்ட சுகாதாரக் கருத்தரங்கில் உரையாற்றிய யாழ் சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. கா. வைத்தீஸ்வரன் இவ்வாறு கூறினார்.

வலிகாமம் தென்மேற்கு சுகாதார அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு மானிப்பாய் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திரு. வி. சிறிகாந்தா தலைமை வகித்தார்.

டாக்டர் வி. சிறீகாந்தா தமது தலைமையுரையில்—

எதிர்காலச் சந்ததியினர் நோயற்றவர்களாக வாழவேண்டுமென்றல் போஷாக்கு உணவு ஒவ்வொருவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். எமக்கு ஏற்படும் நோய்களில் அதிகமானவற்றை எமது சுகாதார அறிவை வளர்த்துக் கொள்வதன் மூலம் தடுக்க முடியும் என்றார்

குறைந்த செலவில் நிறை உணவை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றிய செயல்முறை விளக்கம் ஒன்று. பண்டத்தரிப்பு வாழ்வொளிப் பயிற்சி நிலைய இயக்குனர் அருட்செல்வி யூலாயினால் செய்து காண்பிக்கப்பட்டது.

மானிப்பாய் பயிர்ச் செய்கை உத்தியோகத்தரும் வலிகாமம் தென்மேற்கு சுகாதார அபிவிருத்திச் சங்கச் செயலாளருமான திரு ச. சிவகுமாரன், நவாலி கிறிஸ்தவ இளைஞர் சங்கத் தலைவர் திரு. ஜே. தம்பிராசா, நவாலி ஆரம்ப சுகாதார பராமரிப்புக் குழுத் தலைவர் திரு. ந, தேவகடாட்சம் உட்பட பலர் கருத்துரை வழங்கினர். (உ- 90)

## ஆசிரியர் தெரிவு

மட்டக்கனப்பு அக் 24

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் 53 பேர் விவசாயம், கணிதம், விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களாகநியமனம் பெற்றுள்ளனர்.

அம்பாறை23, திருமலை -12, மட்டக்களப்பு 18 என்ற எண்ணிக்கையில் ஆசிரியர்கள் தெரிவாகியுள்ளனர். (உ-21)

## ஓராண்டு நினைவஞ்சலி

**திருமதி அமிர்தம்மா சேனுதிராஜா**

தோற்றம்: 20 - 05 - 1930
மறைவு: 05 - 11 - 1987

திதி 24 - 10 - 1988

அம்மா! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடி மறைந்தாலும் உங்கள்நினைவுகள் எங்கள் மனதைவிட்டு என்றென்றும் அகலா. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்

செல்வி. நாகேஸ்வரி சேனுதிராஜா
நெட்டிலிப்பாய்
கோண்டாவில். (7540)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





**அமரர் தி. யோகநாதன் திருமதி யோ. தங்கேஸ்வரி**

[உரிமையாளர், தங்கா ஹாட் வெயர் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி)

தோற்றம்: 02 - 01 1951
மறைவு: 04 - 11 - 1987

தோற்றம், 24 11 1954
மறைவு: 04 - 11 - 1987

திதி: 24-10-1988

அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்த இணைபிரியாத தம்பதிகளே! எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஆனலும் உங்கள் ஆசைமுகங்கள் எங்கள் நெஞ்சில் நிலைத்து நிற்கும்.

உங்கள் பிரிவால் வாடும்:

அம்மா, சகோதரர்.
சகோதரிகள், மைத்துனர்கள்,
மைத்துனிமார்.

திருமதி அன்னம்மா தியாகராஜா
'இராசபவனம்'
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (7412)

அம்மா, அப்பா, சகோதரர்,
சகோதரிகள், மைத்துனர்கள்,
மைத்துனிமார்.

கு. தம்பிமுத்து
626/8, K K. S. Road,
Nachimarkovilady,
Jaffna.

## ஓராண்டு நினைவஞ்சலி



**கனகலிங்கம் தம்பிப்பிள்ளை**

உதவி தொழில் நுட்பவியலாளர்,
நீர்ப்பாசன இலாகா திருகோணமலை.
(சொட்டடி)

தோற்றம்: 22 - 09 - 1923
மறைவு: 21 - 10 - 1987

எமது வாழ்வின் மகிழ்விற்காக
எத்தனையோ இன்னல்களைத் தாங்கி
ஏற்றம் கண்ட எமதன்புத் தெய்வமே!
காலத்தால் அழிக்க முடியாத தங்கள்
சம்பிரத் தன்மையை - கொடிய
காலன் அழித்திட்ட செய்தி கேட்டு
கலங்கி நின்று கண்ணீர் வடிக்கிறோம்
கண்ணீரை மாலையாக்கி தங்கள் பாதமலர்க்கு
காணிக்கையாக்குகிறோம்.

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



**ஸ்ரீ சுதர்சகுமார் கனகலிங்கம்**
(ரமணன் - சைமன்)
ஈழநாடு (வ.து)
(கொட்டடி)

தோற்றம்: 22 - 08 - 1969
மறைவு: 24 - 10 - 1987

மரணங்கள் மலிந்துபோன இம்மண்ணில்
உனை இழந்து இன்றோடு
ஓராண்டினைக் கடந்து விட்டோம்.
மழலையுடன் நீ திரிந்த நாள் முதலாய்
எம் நெஞ்சில் நிறைவாக வீற்றிருந்தாய்
இம் மண்ணை விட்டு நீ மறைந்திட்டாலும்
எம்மனதைவிட்டு என்றுமே அகலமாட்டாய்
இறையடி இணைந்திட்ட நின் ஆத்மா
அமைதி பெற எல்லாம் வல்ல இறைவனை
இறைஞ்சுகின்றோம்.

உன் நினைவில் வாழும்
அம்மா, அக்காமார், அண்ணாமார்,
அத்தான்மார் {சற்குருநாதன் / ஸ்ரீ ஆனந்தன்}
அண்ணிமார்.

எமது இல்லத்தில் 6-11-88 இலும் 10 11-88இலும் நடைபெறவிருக்கும் ஆண்டுத் துவசத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

401, கஸ்தூரியார் வீதி,
([illegible] கல்வி இலாகா)
யாழ்ப்பாணம். (7422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

**பொருள்:**
நட்புக்குச் சிறந்த நிலை எது என்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், முடியும் போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும்.

**உதயன்**

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல. 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073
24-10-1988 த. பெ இல 23

# சுயதொழில் ஒன்றை தேடிக் கொள்....!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தேசிய சேவை இளைஞர் மன்றத்தின் ஓர் ஸ்தாபனமான ''நிஸ்கோ'' சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த கடன் மற்றும் உதவிகளை வழங்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு வாழ் இளைஞர்கள் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் அடுத்தடுத்து வந்த அரசுகளால் புறக்கணிக்கப்பட்டது எல்லோரும் அறிந்த உண்மை. வேலைவாய்ப்பைப் பொறுத்த மட்டில் அரசாங்கத்துறை, வர்த்தகத்துறை, தனியார்துறை என்பவற்றில் தமிழ் இளைஞர்களுக்கு அநீதியான முறையில் படிப்படியாகக் கதவடைப்புச் செய்யப்பட்டது. ஒரு கட்டத்தில். இன்றைய நிலையில் நாட்டின் மொத்த வேலைவாய்பில ஐந்து சதவீதமாவது தமிழர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறதா என்பது சந்தேகமே.

சுயதொழில் வேலைவாய்ப்பிலும் தமிழ் இளைஞர், யுவதிகள் அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். விவசாயம் மீன்பிடி சிறுகைத்தொழில் ஆகிய துறைகளில் கூட, அரசாங்க வங்கிகள் உட்பட அரச இயந்திரம் தமிழ்ப்பகுதி மக்களுக்கு உதவவில்லை. முற்றாக ஒதுக்கி வைத்துவிட்டன என்றே சொல்லலாம்,

இப்போது திடீரென தமிழ் இளைஞர் யுவதிகள் மீது அரசுக்குப் பற்றும், பாசமும், மோகமும் வந்தது ஏன், எப்படி என்பது ஒருபுதிர்!

படித்த இளைஞர்கள் யுவதிகள் அரச, வர்த்தக, தனியார்துறை உத்தியோகங்களை எதிர்பார்த்து தமது ஆற்றலையும், காலத்தையும் வீணாக்குவதை விட, சுயதொழில் ஒன்றைத் தேடிக்கொள்வது பல விதங்களிலும் நன்மை தரும். பாடசாலைக் கல்வி முடிந்ததும் தனது சொந்தக் காலில் நின்று, பெற்றோருக்குப் பாரமாக இருக்காமல், சொந்த முயற்சியாலும், ஊக்கத்தாலும் சுதந்திரமாக உழைத்து வாழ்வதற்கு சுயதொழில் உதவுகிறது.

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்' என்று மாணவர்களுக்குப் புத்தி கூறப்படுவது உண்டு. அப்படிக் கற்ற மாணவர்களுக்கு சுயதொழில் ஒன்றைச் செய்வது கஷ்டமல்ல. ''சுயதொழில் ஒன்றைத் தேடிக் கொள்'' என்ற புத்திமதியும் மாணவருக்கு இனிமேல் புகட்டப்பட வேண்டும்

சுயதொழில் தொடங்குவதற்கு, சம்பந்தப்பட்ட தொழிலில் ஆர்வமும், திறமையும், மூலதன வசதியும் அவசியம். அதே போல, உற்பத்திப் பொருள்களை நியாய விலையில் சந்தைப்படுத்தி வருமானம் ஈட்டவும் வகை செய்ய வேண்டும்.

நிதி வசதி (மூலதன வசதி). சந்தை வசதி என்பனவற்றை தனிமனிதன் அதாவது பாடசாலையை விட்டு நீங்கிய இளைஞர்களிடம் எதிர்பார்க்க முடியாது.

சுயதொழில்களை ஆரம்பிக்கக் கடன் மற்றும் நிதி வசதியும், சந்தை வசதியும் ஸ்தாபன ரீதியாகச் செயற்படுத்தப்பட வேண்டும். சுயதொழில்களை ஊக்குவிக்கத் தேவையான ஸ்தாபன ரீதியான செயற்பாடுகளைக் கூட்டுறவு முறையிலும் செய்யலாம்.

வடக்கு - கிழக்கு இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழில் துறையில் உதவுவதற்கென ஓர் கூட்டுறவு அமைப்பை நிறுவுவது மேலானதாகும். அது குறித்து எமது மத்தியில் உள்ள அனுபவசாலிகளும், இளைஞர் நலன் விரும்பிகளும் கவனம் செலுத்துவது நல்லது

## சட்டமாணி நூல்களை தந்துதவக் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 24

தமிழ் அல்லது ஆங்கில மொழியில் சட்டமாணிப் பயிற்சி நெறிக்குரிய நூல்களை வைத்திருப்போர் அவைகளை யாழ். திறந்த பல்கலைக்கழக நூலகத்துக்குச் கொடுத்து உதவும் படி பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்டமாணிப் பயிற்சி நெறியை யாழ் நிலையத்தில் ஆரம்பிப்பதற்கு இங்கு சட்டநூல் நிலையம் ஒன்று இருப்பது மிகவும் அவசியமாகக் கருதப்படுவதனால் இது விடயத்தில் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் திரு என். மகாதேவன் வேண்டியுள்ளார்.

இது தவிர இயந்திரவியல் இயற்கை விஞ்ஞானத்துறைகளுடன் சம்பந்தப்பட்ட நூல்களை வைத்திருப்போரும் அவற்றை திறந்த பல்கலைக்கழக நூல் நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்கலாம் எனவும் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

# பல கட்சி அரசியல் முறையைக் கொண்டுவர ஈரான் அரசு முடிவு!

தெஹ்ரான், அக். 23

ஈரானும் பல கட்சி அரசியல் முறைக்கு மீண்டும் திரும்புகின்றது.

அரசியல் கட்சிகளை இயங்க மீண்டும் அனுமதிக்கப் போவதாக ஈரான் உள்நாட்டு அமைச்சர் முகமத்மதார் ரொஷாரி நேற்றுத் தெரிவித்தார்,

தீவிரவாத இஸ்லாமிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தற்போது சிறைவைக்கப் பட்டுள்ளனர்.

அவர்களை விடுவிக்கப் போவதாகவும் அமைச்சர் அறிவித்தார்.

இதனிடையில் அரசியல் கட்சிகள் இயங்க ஈரான் அரசு நிபந்தனை ஒன்று விதித்துள்ளது.

★ நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

★ நாட்டுக்கு எதிரான சதிச்செயல்களில் ஈடுபடக்கூடாது.

★ தேசிய ஒற்றுமையைப் பேண வேண்டும்.

★ இஸ்லாமிய அடிப்படையில இயங்கவேண்டும்

மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்று அரசியல் சட்சிகள் இயங்க வேண்டும்

இப்படி ஈரான் அரசு தெரிவித்திருக்கிறது.

ஏற்கனவே ஆளும்இஸ்லாமியக் குடியரசுக் சட்சியை ஈரான் அரசு கலைத்து விட்டது. அந்தக் கட்சிக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்சப்படுமா என்பது அறிவிக்கப்படவில்லை.

கடந்த வாரம் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலருக்கு மன்னிப்பு அளித்து விடுதலை செய்தது ஈரான் அரசு.

### வளைகுடாப் போர் முடிவின் பலன்

வளைகுடா யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரபபட்டதைத் தெடர்ந்து, ஈரான் அரசில் உள்ள தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளின் எதிரொலியே, பல கட்சி அரசியல் முறையை மீண்டும் அறிமுகப்படுத்தும் திட்டமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

தமிழ்நாட்டில் முதல்வராகாவிட்டால்

# புதுடில்லியில் துணைப்பிரதமராக ஆசைப்படுகிறார் கருணநிதி!

## நெடுஞ்செழியன் பேச்சு

சென்னை, அக் 23

'தமிழ்நாட்டில் முதல்வராக முடியாவிட்டாலும் டெல்லியில் துணைப்பிரதமராக வரப்பார்க்கிறார் கருணநிதி' என்று நெடுஞ்செழியன் கூறினார்.

செங்கல்பட்டு நகர அ.தி.மு.க (நால்வர் அணி) சார்பில் பெரியார், அண்ணா பிறந்த நாள் விழாவும் நால்வர் அணித் தலைவர்களுக்குப் பாராட்டுவிழாவும் நடத்தப்பட்டது.

இவ்விழாவில் அ. தி. மு. க. (நால்வர் அணி) தலைவர் நெடுஞ்செழியன் கலந்து கொண்டு பேசினார்.

விழாவில் அவர்பேசியதாவது:

ஏழுகட்சிகள் சேர்ந்து அமைத்திருப்பது ஒரு முன்னணியேதவிர கூட்டணி அல்ல. அதிலே இருப்பது நாலு தேசியக் கட்சிகள், மூன்றுமாநிலக் கட்சிகள்.

அறிஞர் அண்ணாவும் புரட்சித் தலைவரும் அமைத்தது கூட்டணி. கருணாநிதி போய்ச்சேர்ந்திருப்பது முன்னணி, கொடியையோ - கொள்கையையோ - கட்சியின் பெயரையோ விட்டுத் தராமல், தொகுதிகளை மட்டும் விட்டுக்கொடுத்துச் சேருவது கூட்டணி.

ஏழுகட்சிகள் சேர்ந்து ஒற்றுமையை ஏற்படுத்தி இருப்பதைப் போலத் தோற்றம் அளிக்கிறார்களே தவிர, இவர்களுக்கு உள்ளேயே ராஜீவை இறக்கிவிட்டு யார் பிரதமராக வருவது என்ற போட்டி இருக்கிறது.

வி.பி.சிங் பிரதமராக வேண்டும் என்று நினைக்கிறார். என். டி. ராமராவும் வரவேண்டும் என்று பார்க்கிறார். தேவிலாலும் ஆசைப்படுகிறார். கலைஞர் எதற்காக இவ்வளவு கஷ்டப்பட்டு பேரணியெல்லாம் நடத்தி அதிலே ஒட்டிக் கொண்டிருக்கிறார் என்றால் இங்கே வரமுடியாவிட்டாலும் அங்கே துணைப்பிரதமராகவந்து விடலாம் என்று பார்க்கிறார்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கலைஞர் வலுவிழந்து இருக்கிறார். 1984இல் அவரோடிருந்த முஸ்லிம்லீக் இப்போது இல்லை ஏழு கட்சி முன்னணிக்கு இந்த ஆதரவு கிடையாது. பணத்தை மட்டும் வைத்துப் பதவிக்கு வந்துவிடலாம் என்ற அவருடைய கனவு நனவாகாது.

நாட்டு மக்கள் தெளிவோடிருக்கிறார்கள். எக்காரணம் கொண்டும் தி மு கவை வர விடக் கூடாதென்ற முடிவோடும் இருக்கிறார்கள்

எப்படி காந்தியின் பெயரைச் சொன்னவுடன் அவருடைய வாய்மையும், தூய்மையும், எளிமையும் மக்கள் நினைவுக்கு வருகிறதோ, அறிஞர் அண்ணாவின் பெயரைச் சொன்னவுடன் அவரது அடக்கமும், அறிவாற்றலும் அழகு தமிழும் நினைவுக்கு வருகிறதோ அதைப்போலக் கருணநிதி என்று சொன்னவுடன் சூதுமையும், பூச்சிமருந்தும், வீராணமும் தான் மக்கள் நினைவுக்கு வருகிறது. எனவே மக்கள் மன்றம் அவரை ஒரு நாளும் ஏற்காது.

இவ்வாறு நெடுஞ்செழியன் பேசினார்.

வெளி உலகில்

## மத்திய கிழக்குப் பிரச்சினை; முபாரக் -- அரபாத் பேச்சு

அம்மான், அக் 23

ஜோர்தான் தலைநகரில் எகிப்து அதிபர் ஹொஸ்னி முபாரக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அரபாத்தும் சந்தித்துப் பல மணிநேரம் பேச்சுக்கள் நடத்தினர்.

மத்திய கிழக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்குத் தேவையானசர்வதேசமாநாடான மாநாட்டை நடத்துவது சம்பந்தமாக அரபு எண்ணங்களை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதே, இப்பேச்சுக்களின் நோக்கம் என அரபாத் பின்னர் தெரிவித்தார்.

பலஸ்தீனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சர்வதேச மாநாடு என்ற யோசனையை இஸ்ரேலியப் பிரதமர் ஷாமிர் நிராகரித்துவிட்டார். ஆனால் இஸ்ரவேல் கூட்டு அரசில் பதவி வகிக்கும் திரு. ஷிலமான் பெரெஸ், இன்னும் பத்துத்தினங்களில் நடக்கும் பொதுத்தேர்தலில் தனது தொழிற்கட்சி பதவிக்கு வந்தால் சர்வதேச மாநாடு நடத்த நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்.

இந்த நிலையில்— ஜனதிபதி முபாரக், அரபாத் பேச்சுக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கருதப்படுகிறது, (எ)

மோசடி வழக்கு

## எதிர்த்து வாதாடத் தயார்; மார்க்கோஸ் அறிவிப்பு!

வாஷிங்டன், அக். 23

அமெரிக்க நீதிமன்றத்தில் தெரிபட்டு மோசடிக் குற்றச்சாட்டை எதிர்த்து வாதாடத் தயாராக இருப்பதாக பிலிப்பீன்ஸின் முன்னாள் ஜனாதிபதி பெர்டினன்ட் மார்கோஸ் அறிவித்திருக்கிறார்.

அமெரிக்க வங்கிகளை ஏமாற்றி 165 மில்லியன் டொலர் பணத்தை அபகரித்ததாகவும் பிலிப்பீன்ஸில் 150 மில்லியன் டொலரை சூறையாடியதாகவும் அமெரிக்க அரசு நீதிமன்றத்தில் திரு மார்க்கோஸ் அவரது மனைவி இமெல்டா ஆகியோர் மீது வழக்குத் தாக்கல் செய்திருக்கிறது.

இவ்வழக்குப் பற்றி 72 வயதான திரு மார்கோஸ் ஹவாயில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அந்த அறிக்கையிலே முன்கண்டவாறு தெரிவித்தார். (எ)

## மேல்நீதிமன்ற நீதிபதிக்கு கொலைப் பயமுறுத்தல்

கொழும்பு, அக் 24

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு எச். டபிள்யு. சேனநாயகாவுக்கு கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது பற்றி நீதிபதி திரு. சேனநாயக்கா, பொலீஸ்மா அதிபருக்கும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருக்கும் முறையிட்டிருக்கிறார்.

இத் தகவல்களை நீதிபதி திரு. சேனநாயக்காவே, நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் வெளியிட்டார்.

பொலீஸ் காவலில் உயிரிழந்ததாகக் கூறப்படும் சட்டத்தரணி லியனாராச்சியின் மரண விசாரணை நேற்று முன்தினம் திரு சேனநாயக்கா முன் மீண்டும் ஆரம்பமானது

அப்போது இத் தகவல்களை வெளியிட்ட நீதிபதி மேலும் சொன்னதாவது;

'நீதிபரிபாலன அதிகாரியாக நான் 22 ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறேன்.

காலியில் இடம்பெற்ற டாக்டர் விக்கிரமசிங்க தாக்குதல் வழக்கு, கதிர்காமம் அழகுராணி வழக்கு வண. பிதா சிங்கராயர் வழக்கு ஹென்றி பெரேரா வழக்கு ஆகிய முக்கிய வழக்குகளை எல்லாம் விசாரித்திருக்கிறேன். ஆனல் இந்த வழக்கில்தான் எனக்கு முதல் தடவையாக கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது'

இப்படி நீதிபதி சொன்னார். (உ-எ)

# 90 கோடி ரூபா செலவில் 65 ஆயிரம் வீடுகள் புனரமைக்கப்படும்

## கெயர் ஸ்தாபனம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், அக். 24

யாழ்குடா நாட்டில் 65 310 வீடுகளை புனர்நிர்மாணம் செய்யும் வேலைகளை கெயர் சர்வதேச நிறுவனம் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

இத்தத் திட்டம் மூன்று வருட காலத்தில் பூர்த்தி செய்யப்படும்

இதற்கு தொண்ணூறு கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருடமும் இந்தத் திட்டத்திற்கென முப்பதுகோடி ரூபா என்ற அடிப்படையில் மூன்று வருடங்களுக்கு இதற்கான புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படும்

அசம்பாவிதங்களின் போது யாழ் குடாநாட்டில் சேதத்துக்குள்ளான வீடுகளில் ஐம்பது சதவீதத்துக்கும் மேற்பட்ட சேதங்கள் ஏற்பட்ட வீடுகளே இந்தத் திட்டத்தின் கீழ் புனர் நிர்மாணம் செய்யப்பட இருக்கின்றன.

புனர் நிர்மாண வேலைகளுக்கான உதவிகளில் பெரும்பகுதி கட்டட நிர்மாணப் பொருட்களாகவே வழங்கப்படும் ஒரு சிறு பகுதி மாத்திரமே பணமாக வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் மாதம் எழுநூறு ரூபாவுக்கும் குறைவான வருமானம் பெறுபவர்களுக்கு முப்பதாயிரம் ரூபா கடனாக வழங்கப்படும். அதில் பதினைந்தாயிரம் ரூபா கடனாகவும் எஞ்சிய பதினையாயிரம்ரூபா நன்கொடையாகவும் வழங்கப்படும்.

மாதம் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கும் ஐபாயிரம் ரூபாவுக்கும் இடைப்பட்ட வருமானம் பெறுபவர்களுக்கு ஐம்பதினாயிரம் ரூபா கடனாக வழங்கப்படும். இந்தக் கடன் தொகை இருபது வருட காலத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் வருடம் ஆறுசதவீத வட்டி இந்தக் கடனுக்கு அறவிடப்படும்.

மாதம் ஐயாயிரம் ரூபாவுக்கும் அதிகமான வருமானம் பெறுபவர்களுக்கு ஒன்றரை லட்சம் ரூபா கடனாக வழங்கப்படும் இருபது வருட காலத்தில் கடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் ஆறு சதவீத வட்டி கடனுக்கு அறவிடப்படும்.

பிரஸ்தாப கடன் தொகைகளில் 15சதவீதம் மாத்திரமே பணமாக வழங்கப்படும். எஞ்சிய 85சதவீதமும் கட்டட நிர்மாணப் பொருள்களாகவே வழங்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இந்தக் கடன் தொகைகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (இ - ஐ)

கணக்குப் பதிவாளர்கள்

# பதவி உயர்வுப் பரீட்சைக்கு தோற்றத் தவறினர்

## மீண்டும் பரீட்சை நடத்தக் கோரிக்கை

பருத்தித்துறை, அக் 24

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் கணக்குப் பதிவாளர் தரம் II க்கான பதவி உயர்வுப் பரீட்சைக்கு வட மாகாண கணக்குப் பதிவாளர்கள் தோற்ற முடியவில்லை.

இப் பரீட்சை இம்மாதம் 15 ஆம் திகதி கொழும்பு சிறீ புத்தா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

ஆனல் அதற்கான நேரசூசி அனுமதிக்கடிதம் அடங்கிய அறிவுறுத்தல்கள் 18 ஆம் திகதியே பரீட்சார்த்திகளுக்குக் கிடைத்தன.

பரீட்சைக்குத்தோற்ற முடியாமற் போனதால் மீண்டும் இப்பரீட்சையை நடத்துமாறு கணக்குப் பதிவாளர் சங்கம் கோரி உள்ளது.

[illegible] பரீட்சைத் திணைக்களம் நடத்தும் எல்லா பரீட்சைகளுக்கும் யாழ்ப்பாணத்தில் ஒரு பரீட்சை நிலையம் அமைக்கப்பட வேண்டுமென இச்சங்கத்தினர் யாழ் மாவட்டப் பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளனர் எனத் [illegible] (இ-118)

## இளவாலையில் இன்று நூலகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், அக். 24

இளவாலை பொருளாதார கலாசார வளர்ச்சிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நூலக மற்றும் ஓவியக் கண்காட்சி ஒன்று இன்று பிற்பகல் 3மணிக்கு சங்கக் கட்டடத்தில் ஆரம்பித்து வைக்கப்படும்.

இன்று மாலை 6மணி வரையும், நாளை காலை 8மணி முதல் மாலை 6மணி வரையும் இந் நிகழ்ச்சி நடைபெறும்.

யாழ். உள்ளூராட்சி ஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிழ்ச்சியை ஆரம்பித்து வைப்பார்.

ஓவியர் மார்க்கின் மாணவர்கள் வரைந்த ஓவியங்கள் இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட இருக்கின்றன. (உ)

### மக்கத்து..,

(3 ஆம் பக்க தொடர்ச்சி)

லாம் மிக வேகமாக பரவத் தொடங்கியது

ஹிஜ்ரி 10இல் கடைசியாக மக்காவுக்கு ஹஜ் யாத்திரைமேற்கொண்டு அங்கு இறுதிப் பேருரையும் நிகழ்த்தினர்கள்.

பின் மதீனா திரும்பி வந்து இரு மாதங்களின் பின் மூன்று நாட்கள் சுயீனமாக இருந்து ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு றபீஉல் அவ்வல் 12ஆம் நாள் திங்கட்கிழமை 63 ஆம் வயதில் காருண்யக் கடல் கருணை நபி (ஸல்) அவர்கள் இவ்வுலகை நீத்தார்கள்.

(இன்னுலில்லா ஹி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Indra Tooth Ache Drops
இந்திரா பல்வலி மருந்து
இது எல்லா விதமான பல்வலிகளையும் உடனே குணப்படுத்துகிறது. பல் விஷக்கிருமிகளை நாசஞ்செய்கிறது. பல் அசைவு, பல் சொத்தை, பல் கட்டி, தந்த வாய்வு, தந்த சூலை, துர்நீர் வடிதல் முதலியவற்றுக்குச் சிறந்தது.
கிடைக்கும் இடம்
க.செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச்சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

24 - 10 - 1988 திங்கட்கிழமை

C. S. K. Omha Water
சி. எஸ். கே. ஓமத்திராவகம்
(குழந்தைகளின் வயிற்று நோய்களுக்குச் சிறந்தது)
மந்தம், மாந்தம், வயிற்றுவலி, வாந்தி, வாய்வு, அஜீரணம், வயிற்றோட்டம், பூச்சி, நெஞ்செரிவு முதலியன தீரும்.
கிடைக்கும் இடம்:
க.செ. கைலாசம்பிள்ளைஅன் சன்ஸ்
மருந்துச் சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

### வடக்கு கிழக்கில்

# அமைதிநிலை ஏற்படும் வரையில் புனர் நிர்மாண வேலைகள் இல்லை

## சர்வதேச மனித உரிமைகள் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், அக் 24

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைதியும், வழமையான நிலைமையும் திரும்பும் வரையில் புனர் நிர்மாண வேலைகளை மேற்கொள்ள முடியாதென்று சர்வதேச மனித உரிமைகள் சங்கம் அறிவித்திருக்கிறது.

தமிழ் பகுதிகளில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் மக்களின் வாழ்க்கையில் முற்றுமுழுதான அமைதியும், வழமையான நிலைமையும் ஏற்படவேண்டும்.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைசாத்தான பிறகு வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழர்களின் வாழ்க்கையில் பூரண அமைதியையும், வழமையான நிலைமையும் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

தற்போதைய நிலையில் இந்தப் பகுதிகளில் புனர் நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளையோ அல்லது ஆரம்ப நடவடிக்கைகளையோ மேற்கொள்வது புத்திசாலித்தனமாகாது என்று மனித உரிமைகள் சங்கம் தெரிவித்திருக்கிறது.

இதனால் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அமைதியும், வழமையான நிலைமையும் ஏற்படுத்தப்படும் வரையில் அந்தப் பகுதிகளில் எந்த ஒரு புனர் நிர்மாணத் திட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதில்லையென்று சர்வதேச மனித உரிமைகள் சங்கம் முடிவு செய்திருக்கிறது. (உ-ஐ)

## கிராம சேவையாளர் நேர்முகப் பரீட்சை நிலைமை சீரடைந்த பின்பே!

### யாழ். அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், அக். 24

குடாநாட்டில் நிலைமை சீரடைந்த பின்னரே கிராம சேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படும்.

இவ்வாறு யாழ் அரச அதிபர் எம் பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

கிராம சேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் நடைபெறுவதற்கான திகதிகள் நிர்ணயிக்கப்பட்டும், தவிர்க்க முடியாத காரணங்களினால் அந்தந்தத் திகதிகளில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தமுடியவில்லை.

அதனைத் தற்போது நடத்துவதற்கு நிலைமை சீரானதாக இல்லை. நிலைமை சீரடைந்தபின்னர் மீண்டும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-10)

## காரைநகரில்சனியன்று துக்கம் அனுஷ்டிப்பு

காரைநகர், அக் 24

கடந்த சனிக்கிழமை காரைநகரில் ஹர்த்தாலும், துக்கதினமும் அனுஷ்டிக்கப்பட்டன.

ஊர்காவற்றுறையில் உயிரிழந்த - காரைநகரைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி உதயனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவே துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

துக்கம் அனுஷ்டிப்பதற்காக தோரணம் கட்டிக் கொண்டிருந்த சிலர் தாக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

குத்துவிளக்குகள், மாலைகள் தூக்கி வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-73)

## 2 கடற்படையினர் பலி

காரைநகர், அக் 24

கடந்த புதன் கிழமை காரைநகரில் நடைபெற்ற மோதல் ஒன்றில் சிறீலங்கா கடற்படையைச் சேர்ந்த இருவர் மரணமானதாக அறியப்படுகிறது. அண்மைக்காலமாக கடற்படையினர் முகாமை விட்டு வெளியே வந்து அடிக்கடி மக்களை துன்புறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேபோல கடந்த புதன்கிழமையும் கடற்படையினர் பலகாட்டு சந்தி வரை வெளியே வந்த போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் கடற்படையினருடன் மோதியதாகவும்—

அவ்வேளையில் இரு கடற்படையினர் உயிர் இழந்ததாகவும் அறிய வந்தது. (உ-73)

ALCOHOLICS ANONYMOUS-
JAFFNA GROUP

குடிப்பழக்கத்தை நிறுத்துவதற்கு விரும்புகிறீர்களா? இது சம்பந்தமாக உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

சந்திக்கும் நேரங்கள்;-

26- 10- 88 பி. ப. 3. 00, பி. ப. 5. 00

''சாந்திகம''

21, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (7539)

### அமைதிப்படையினது உட்பட

## சகல இராணுவ நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துக!

### ஜே. ஆருக்குக் கடிதம்

கொழும்பு, அக். 24

சுதந்திரக்கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்க்காங்கிரஸ் எக்ஸத் ஜாதிக லங்காகட்சி ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், மக்கள் ஐக்கிய முன்னணி, லிபரல் கட்சி ஆகியன ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு கூட்டாக கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தன.

கடிதத்தில் காவலில் உள்ள சகல மாணவர், அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்க!

இந்திய அமைதிப் படையினது உட்பட சகல இராணுவ நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துக!

ஜனாதிபதி தேர்தல் பொதுத் தேர்தல் ஆகியவற்றுக்கான திகதிகளை அறிவிக்குக! என்று கோரப்பட்டுள்ளது.

வண- முருத்தெட்டுவ ஆனந்த தேரர், வண- மடுலுவவ சோபித்தேரர், திரு. தினேஷ் குணவர்த்தன பிரின்ஸ் குணசேகரா அடங்கிய குழு ஒன்றும் ஜனாதிபதிக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

அரசியல் கைதிகள் மற்றும் காவலில் உள்ள மாணவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படவண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியுடன் பேச்சுக்களை நடத்த வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் ஆகியவற்றை ஒரே நாளில் நடத்துவதாக அறிவிக்க வேண்டும்.

இப்படி இந்த நான்கு பேர் குழு ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டிருக்கிறது. (ஒ-எ)

### மக்கள் வெளியேற்றம்

யாழ்ப்பாணம் அக் 24

ஸ்கந்தபுரம் பகுதியில் இருந்து வெளியேறிய நூற்றுக்குமேற்பட்ட குடும்பங்கள் கிளிநொச்சி, ஜெயந்திநகர்ப் பகுதிகளில் உள்ள ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தங்கியுள்ளனர்.

ஸ்கந்தபுரம் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மோதல்களை அடுத்தே இவர்கள் இடம்பெயர்ந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்களைக் கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும், ஏனைய பொது ஸ்தாபனங்களும் உணவு, உடை என்பவற்றை வழங்கி ஆதரித்து வருகின்றன (ஒ 9)

# நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துக!

### மகாசங்கம் ஜனாதிபதிக்கு வேண்டுகோள்

கொழும்பு, அக். 24

நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலை உடனே நடத்தும்படி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு மகாசங்கத்தினால் அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

மல்வத்தை, அஸ்கிரிய, அமரபுரசங்க, ராமன்ய நிக்காய ஆகிய நான்கு பீடங்களின் தலைவர்களே மகாசங்கத்தின் சார்பாக இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றனர்.

நாட்டில் நிலவும் அரசியல் அமைதியின்மைக்குத் தீர்வுகாண—

★ நாடாளுமன்றம் உடனே கலைக்கப்படவேண்டும்.

★ பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

புதிய அரசு தெரிவு செய்யப்படும்வரை காபந்து அரசாங்கம் நாட்டை நிர்வகிக்க வேண்டும்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிய கடிதத்தில் நான்கு பௌத்தமதத் தலைவர்களும் தெரிவித்திருக்கின்றனர்.

நாட்டின்நிலை பயங்கரமானதாக மாறி வருகின்றது குறித்தும் இவர்கள் ஜனாதிபதியிடம் கவலை தெரிவித்திருக்கின்றனர். (உ-எ)

## படையினர் அகன்றனர்

யாழ்ப்பாணம், அக் 24

யாழ். பஸ் நிலையப் பகுதி மின்சார நிலைய வீதி, மேல்மாடியில் முகாமிட்டிருந்த அமைதிப்படையின் மத்திய றிசேவ் பொலீஸ் படையினர் நேற்று அவ்விடத்தை விட்டு அகன்றுவிட்டனர்.

கடந்த சில தினங்களாக பஸ் நிலைய முன் பகுதியில் உள்ள இரு வழிப்பாதை தடைசெய்யப்பட்டு ஒரு வழிப் பாதையே அனுமதிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் நேற்று முதல் இந்தப்பகுதி இரு வழிப் பாதைக்கு அனுமதிக்கப்பட்டது. (ஒ-9)

## முறைப்பாடுகளைப் பதிவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், அக் 24

யாழ். பொலீஸ் பிரிவில் முறைப்பாடுகளைப் பதிவோர் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகின்றது.

இடம் பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்கும் விண்ணப்பப்படிவத்தில் பொலீஸ் முறைப்பாட்டுப் பிரதிகள் உண்டா என்றும்கேட்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே யாழ் பொலீஸ் பிரிவில் முறைப்பாடுகளைப் பதிவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தினமும் நூற்றுக்கு மேற்பட்டவர்களின் முறைப்பாடுகள் இங்கு ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இரண்டு தினங்களின் பின்னர் முறைப்பாட்டுப் பிரதிகள் பொலீஸ் அதிபரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு உரியவர்களிடம் வழங்கப்படுகின்றன (இ-10)

தமிழீழ மன்றத் தலைவர்

அமரர்

திரு. க. சிவானந்தசுந்தரம்

அவர்களுக்கு எமது நெஞ்சுருகிய

கண்ணீர் அஞ்சலி

தமிழர்களின் உயர்வுக்காக உழைத்த உத்தமர் அமரர் திரு க. சிவானந்தசுந்தரம் அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியும் அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அரியாலை பிரசைகள் குழு,
யாழு/மாணவர் ஒருங்கிணைப்புக் குழு,
அரியாலை வாழ் தமிழீழ மக்கள்.

(7430)

### பெரும்பான்மையான

# தமிழ் அரசியல் கைதிகள் விரைவில் விடுதலையாவர்!

கொழும்பு, அக். 24

பூஸா, மகஸின் மற்றும் தென்இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளில் பெரும்பாலானோர் இன்னும் சிலநாட்களுக்குள் விடுதலை செய்யப்படுவர் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.

சிறைகளிலும் வெளியேயும் நடந்துவரும் போராட்டங்களை அடுத்தும், மாகாண சபைத் தேர்தலை ஒட்டியுமே விடுதலைக்கான அவசர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறியவருகிறது.

எனினும் தமிழீழ விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களையும் கொழும்பு உட்பட தென்பகுதிகளில் குண்டு வெடிப்பு மற்றும் வன் செயல்களில் ஈடுபடுபவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களையும் விடுவிப்பது குறித்து இது வரை முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-ஒ)

## பூஸா....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யால் மக்கள் எம் மீது கொண்ட நம்பிக்கைக்கு துரோகம் செய்வதவர்களாக்கப்பட்ட நிலையிலுள்ளோம்.

இந்நிலையில் தண்டிக்கப்பட்ட அரசியல் கைதிகள் அவர்கள் விடுதலையைப் போராடி பெறும் நிலையிலுள்ளனர். மரண நோன்புப் போராட்டம் தொடருகிறார்கள் இதன் தாக்கம் சிறைக்கு வெளியிலும் பலமாக இருக்கும்.

இவ்விடயத்தில் இரு அரசுகளும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். இல்லையேல் இதன் தாக்கம் சிறையில் மட்டுமல்ல, வெளியிலும் பலமாக இருக்கும்.

இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதி இலங்கை ஜனாதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுளளது. (ஜ-21)

### சூறுவளியில் 28 பேர் பலி

மனகுவா, அக் 24

மத்திய அமெரிக்க நாடுகளைநேற்று சூறுவளி தாக்கியது

இதனால் நிக்கரகுவாவின் தலைநகரான மனகுவாவில் 28 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது (எ)

## புகலிடம் தேடி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் எதிர்காலமும், பாதுகாப்பும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே இலங்கையிலிருந்து புகலிடம் தேடி வருவோரின் விடயத்தில் ஓரளவு தாராளமாக நடந்து கொள்ள வேண்டும் என ஐரோப்பிய நாடுகளிடம் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் கோரி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

### பிரேமாவுக்கு சிறிமா

## கிரவல் வீதியில் நடந்துபோக அழைப்பு

கொழும்பு, அக் 24

கிரவல் வீதியில் இருவரும்நடந்துபோவோம், வருகிறீர்களா?

சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமவோ பண்டாரநாயக்கா பிரதமர் பிரேமதாஸாவுக்கு முன்கண்டவாறு சவால் விடுத்தார்.

அப்புத்தளையில் நடந்த கூட்டம் ஒன்றில் திருமதி பண்டாரநாயக்கா பேசினார்

அவர் மேலும் சொன்னதாவது:

எனது வாழ்நாளிலே நான் கிரவல் போட்ட வீதியில் வெறுங்காலுடன் நடந்துபோகவில்லை என்று பிரதமர் பிரேமதாஸா கூறிவருகின்றார்.

எனது நாளாந்த வாழ்க்கையை இப்படி பிரதமர் கூர்ந்து கவனித்து வந்திருக்கிறார் என்பது எனக்கு இது வரை தெரியாது இருந்தது.

நான் அவருக்கு சவால் விடுகின்றேன்.

தனது பாதுகாப்பு எடுபிடிகளின்றி தன்னந்தனியாக என்னுடன் கிரவல் வீதியில் நடந்து வர அவர் தயாரா?

நான் பதவிக்கு வந்தவுடன் மாணவரைப் [illegible] [illegible] டுக்களை விசாரிக்க உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் ஜனாதிபதிக் குழு ஒன்றை நியமிப்பேன்.

பொலீஸாருக்கு வழங்கப்பட்ட முறைகேடான பதவி உயர்வுகள் பற்றியும் இக்குழு விசாரிக்கும்.

நேர்மையான பொலீஸாரைக் கௌரவிக்க வேண்டும். ஜனாதிபதி தேர்தல் தினம் அன்று சட்டவிரோத உத்தரவுகளை அமுல் நடத்தாது பாரபட்சமற்ற முறையில் பொலீஸார் பணியாற்ற வேண்டும்.

—இப்படி திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார். (உ-எ)

## ரஷ்யாவில் கிறிஸ்தவ வழிபாடு

மாஸ்கோ, அக். 23

சோவியத் யூனியனில் உள்ள லியூதானியா மாநிலத்தில் கிறிஸ்தவ தேவாலயம் 40 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் தடவையாக வழிபாட்டுக்குத் திறந்து விடப்பட்டது.

இதுவரைகாலமும் இத்தேவாலயம்பொருட்காட்சி நிலையமாக பயன்படுத்தப்பட்டு வந்தது.

மதவழிபாட்டுக்கு தேவாலயம் திறந்து விடப்பட்டதை கொண்டாடும் முகமாக தீவட்டி ஊர்வலம் ஒன்றை மக்கள் நடத்தினர் என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகமணி செல்லம்மா

திருநெல்வேலி மேற்கு நாவலடி ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி நாகமணி செல்லம்மா காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற நாகமணி (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்) அவர்களின் அன்பு மனைவியும் மகேந்திரன் (Springwood Plantation Rakwana), மகாலெட்சுமி (ஆசிரியை பண்டத்தரிப்பு, இந்துக்கல்லூரி), தேவதாஸ் (மேற்கு ஜேர்மனி), லோகேந்திரலிங்கம் (மின்சார அத்தியட்சகர், ஊர்காவற்றுறை பிரதேசசபை), சிவராமன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் பிரதேச சபை உப அலுவலகம், நாவற்குழி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கமலர், இலட்சுமணசாமி (ஆசிரியர் சில்லாலை R C. T. M. வித்தியாலயம்), சாவித்திரி (மேற்கு ஜேர்மனி) பத்மலோஜினி, செந்தில்மணி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதீபன், சஞ்சுதா சஞ்சீவன், சஞ்சயன், சங்கீதா, தனுஜா, யாழினி, ஜனனி, பாலசத்தியன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று திருநெல்வேலி பொது மயானத்தில் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆர். என். லோகேந்திரலிங்கம்

(7423)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthavan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Monday 24th October 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org